RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI | DAILY TAMIL | தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை | PUBLISHED FROM - CHENNAI

15.12.2025 (திங்கட்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 7 | ஓசை 267

Facebook/dailymadras@gmail.com | dailymardras@gmail.com

5 ஜனவரி 6–ஆம் தேதி டி.கே. சிவக்குமார் கர்நாடக முதல்வராகிறார்? எம்.எல்.ஏ. தகவல்



6 கம்போடியாவுடன் தொடரும் எல்லை மோதல் தாய்லாந்து வீரர்கள் 4 பேர் பலி



8 தரம்சாலாவில் 3-வது சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டி: இந்தியா - தென் ஆப்பிரிக்க அணிகள் பலப்பரீட்சை



### காற்றின் தரம் மிக மிக மோசம்

# டெல்லியில் டீசல் வாகனங்கள் நுழைய தடை

## மூச்சுத் திணறலால் பொதுமக்கள் கடும் அவதி; 'வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்' என எச்சரிக்கை

**புதுடெல்லி, டிச.15–**

டெல்லி என்சிஆர் பகுதியில் மிக மோசமான காற்றின் தரம் காரணமாக மத்திய அரசு மிகக் கடுமையான அவசர நடவடிக்கைகளை அமல்படுத்தியுள்ளது. காற்றின் தரக்குறியீடு 448ஆக உயர்ந்துள்ளது. டெல்லியிலும், குருகிராம், பரிதாபாத், காஜியாபாத் மற்றும் கவுதம் புத்த நகர் மாவட்டங்களிலும் பிஎஸ்3பெட்ரோல் மற்றும் பிஎஸ்4 டீசல் நான்கு சக்கர வாகனங்களுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகள், முதியவர்கள் மூச்சுத் திணறலால் கடும் அவதியடைந்தனர்.

பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. டெல்லியில் ஒவ்வொருகுளிர்காலத்தின் போதும் காற்றின் தரம் மிகவும் பாதிக்கப்படும். இந்த ஆண்டு குளிர்காலத்தின் தொடக்கத்திலேயே காற்று மிகவும் மாசுபட்டு உள்ளது. கடந்த சில நாட்களாகவே தலைநகரில் காற்றின் தரம் மோசமாக இருந்து வருகிறது.

இதனால், மாநிலம் முழுவதும் நச்சு புகை சூழ்ந்து காணப்படுகிறது.

அதன்படி, அண்மையில் டெல்லிக்குவெளியே பதிவு செய்யப்பட்ட, பிஎஸ் 6 விதிமுறைகளை பின்பற்றாத கனரக சரக்கு வாகனங்கள் டெல்லிக்குள்நுழையதடைவிதித்து உத்தரவிடப்பட்டது. இந்நிலையில், கிராப் 4 நிலை அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பிஎஸ்3பெட்ரோல் மற்றும் பிஎஸ்4டீசல் நான்கு சக்கர வாகனங்களுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தஉத்தரவுஅமலுக்கு வந்த நிலையில் டெல்லி போக்குவரத்து போலீசார் உடன் சிறப்பு குழுவினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர். 90 சதவீத வாகனங்கள் டெல்லிக்குள் வர பயன்படுத்தும் 23 முக்கிய பகுதிகளில் இந்த குழு கண்காணிப்பு பணியை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் டெல்லியில் காற்றின் தரக் குறியீடு மாலை 4 மணியளவில் 431 ஆக இருந்து மாலை 6 மணியளவில் 441 ஆக உயர்ந்தது.l

மாசு அளவுகள் கடுமையான வரம்பை மீறி குறியீடு 460 ஆக இருந்தது. மோசமடைந்து வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தேசிய தலைநகர் பிராந்தியம் முழுவதும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில், மிக உயர்ந்த அளவிலான கட்டுப்பாடுகளான கிராப் நிலை 4 நடவடிக்கை அமல்படுத்தப்பட்டது. மேலும் முக்கியமான நடவடிக்கையாக டெல்லி முழுவதும் கட்டுமானம் மற்றும் இடிப்பு நடவடிக்கைகளுக்கு முழுமையான தடைவிதிக்கப்பட்டுள்ளது. தேசிய தலைநகர் பிராந்தியம் முழுவதும் கல் நொறுக்கிகள், சுரங்க செயல்பாடுகள் நிறுத்தப்படுகிறது.

இது அலுவலகங்களுக்கு 50 சதவீதம் 4 கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. காற்றின் தரம் கடுமையாக மாறியதால் டெல்லிஎன்.சி.ஆர் கடுமையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தியது, வாகனங்கள் மற்றும் கட்டுமானத்தை கட்டுப்படுத்தியது, பள்ளிகளின் வேலை நேரம் மாற்றப்பட்டுள்ளது. 50 சதவீத நிறுவனங்கள் வீட்டில் இருந்து வேலை பார்க்குமாறு ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. மாற்றியது, வீட்டிலிருந்து வேலை செய்வதை சாத்தியமாக்கியது மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்கள் வெளிப்புற வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியது. சனிக்கிழமை மாலை7மணிநிலவரப்படி டெல்லியின் ஒட்டுமொத்தகாற்று தரம் மிக அதிகமாக 448 ஆக இருந்தது, இதனால் மேலும் மோசமடைவதைத் தடுக்க அதிகாரிகள் பிராந்தியம் முழுவதும் கட்டுப்பாடுகளை கஅதிகாரிகள் கடுமையாக்கியுள்ளனர். 2016 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட பதில் செயல் திட்டம் செயல்படுத்துவது காற்று தர மேலாண்மை ஆணையத்தால் மேற்பார்வையிடப்படுகிறது. விதிகளின் கீழ் என்ன கட்டுப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் என்ன அனுமதிக்கப்படுகிறது? உடனடியாக அமலுக்கு வரும் வகையில், ஐந்து அம்ச செயல் திட்டம் முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் பல்வேறு மாநில அரசுகள், மாசு கட்டுப்பாட்டு வாரியங்கள் மற்றும் அமலாக்க நிறுவனங்களால் செயல்படுத்தப்பட உள்ளன. முக்கிய கட்டுப்பாடுகள் மற்றும் விலக்குகள் பின்வருமாறு: அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வது அல்லது அத்தியாவசிய சேவைகளை வழங்குவதைத் தவிர, டீசல் லாரிகள் டெல்லிக்குள் நுழைவது நிறுத்தப்பட்டுள்ளது. எல்என்ஜி, சிஎன்ஜி, மின்சாரம் மற்றும் பிஎஸ்6I டீசல் லாரிகள் டெல்லிக்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றன. அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் வாகனங்கள் தவிர, டெல்லியில் பதிவுசெய்யப்பட்ட டீசல் கனரக பொருட்கள் வாகனங்கள் மீது கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

டெல்லிக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட இலகுரக வணிக வாகனங்கள் மின்சாரம், டீசல் அல்லது அத்தியாவசிய பொருட்கள் அல்லது சேவைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் தவிர வேறு எந்த வாகனங்களுக்கும் அனுமதி இல்லை.

நெடுஞ்சாலைகள், சாலைகள், மேம்பாலங்கள், மேம்பாலங்கள், மின் பரிமாற்றக் கோடுகள், குழாய்வழிகள் மற்றும் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு பணிகள் போன்ற நேரியல் பொதுத் திட்டங்கள் உட்பட கட்டுமானம் மற்றும் இடிப்பு நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு மற்றும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு சாத்தியமான இடங்களில் நேரடி மற்றும் ஆன்லைன் வகுப்புகளை இணைத்து, நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

டெல்லி, குருகிராம், பரிதாபாத், காஜியாபாத் மற்றும் கௌதம் புத்த நகர் உள்ளிட்ட மாவட்டங்கள் பலத்த கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ப்பட்டுள்ளன.

# ராகுலுடன் தமிழக காங்கிரஸ் நிர்வாகிகள் இன்று ஆலோசனை

**புதுடெல்லி, டிச.15–**

தமிழகத்தில் தேர்தல் கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை உறுதி செய்ய, தமிழகம் புதுச்சேரி காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளுடன் ராகுல் காந்தி டெல்லியில் டிச.15ம் தேதி ஆலோசனை நடத்துகிறார்.



இதுகுறித்து காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியபோது, ''தமிழகத்தில் திமுகவுடன் கூட்டணி என்று உறுதியான நிலையில், தவெக தலைவர் விஜய்யை ராகுல்காந்தியின் நெருங்கிய வட்டாரத்தில் உள்ள பிரவீன் சக்கரவர்த்தி நேரில் சந்தித்து பேசியுள்ளார்.

'விஜயை சந்தித்தது கூட்டணி குறித்து பேசுவதற்காக இல்லை' என்று பிரவீன் சக்கரவர்த்தி தெளிவுப்படுத்தி இருந்தாலும் கூட்டணி குறித்த குழப்பம் தமிழக காங்கிரஸ் கட்சியினர் இடையே நிலவுகிறது.

திமுகவும் சந்தேகப் பார்வையுடனே காங்கிரஸை பார்க்கிறது.

இதுகுறித்த தகவல்கள் தொடர்ந்து தலைமைக்கு தெரிவிக்கப்பட்டும் வந்தது. அதனடிப்படையில், தமிழகம் புதுச்சேரியை சேர்ந்த காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளை டிச.15ம் தேதி டெல்லியில் சந்திக்க ராகுல் காந்தி நேரம் ஒதுக்கியுள்ளார்.

தமிழகத்தில் இருந்து மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை, மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், திருநாவுக்கரசர், அழகிரி, தங்கபாலு உள்ளிட்ட 21 பிரதிநிதிகள், புதுச்சேரியில் இருந்து காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம், முன்னாள் மத்திய அமைச்சர் நாராயணசாமி உள்ளிட்ட 15 பிரதிநிதிகள் ராகுலை சந்தித்து ஆலோசனை நடத்துகின்றனர்' என்றனர்.

### வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தம்

# தமிழ்நாடு உள்ளிட்ட 8 மாநிலங்களுக்கு சிறப்பு பார்வையாளர்கள் நியமனம்

## தேர்தல் ஆணையம் நடவடிக்கை

**புதுடெல்லி, டிச. 15**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் இறுதி கட்டத்தை நெருங்கி உள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ராஜஸ்தான் உள்ளிட்ட 8 மாநிலங்களுக்கு சிறப்பு பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

ஏறத்தாழ 2 தசாப்தங்களுக்குப் பிறகு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக பீகாரில் இது அமலாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தற்போது தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்காளம் உள்ளிட்ட 9 மாநிலங்களிலும் புதுச்சேரி உள்ளிட்ட 3 யூனியன் பிரதேசங்களி லும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் கடந்த 2002–ஆம் ஆண்டுக்குப் பிறகு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1.1.2026 தேதியில் 18 வயது பூர்த்தியடை பவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் நோக்கத்தில் இந்த நடவடிக்கையை இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள் கடந்த நவம்பர் 4–ஆம் தேதி தொடங்கின. ஒவ்வொரு வாக்காளருக்கும் வீடுவீடாகச் சென்று கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கினர்.

அந்த படிவங்களை பூர்த்தி செய்ததும் அவற்றை வாங்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்தனர்.

இந்தப் பணி மாலை 5 மணிக்கு நிறைவடைகிறது.

இதுவரை படிவங்களை வாங்கி பூர்த்தி செய்யாத வாக்காளர்கள் இந்த இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நிரப்பிக்கொடுக்க வேண்டும் என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் இன்று மாலை நிறைவடைந்ததும் அந்த விவரங்களை அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்குவார்கள். அவர்களும், தகுதியுள்ள வாக்காளர்கள் யாரும் விடுபட்டுவிடாதபடி ஆய்வு செய்வார்கள்.

தமிழ்நாட்டில் இறந்து போனவர்கள், நிரந்தரமாக இடம் மாறியவர்கள், இருப்பிடம் குறித்து தெளிவான தகவல் இல்லாததால் கண்டுபிடிக்கமுடியாதவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாக்குரிமை கொண்டவர்கள் என சுமார் 80 லட்சம் வாக்காளர்கள், பட்டியலில் இருந்து நீக்கப்ப ட்டுள்ளனர். இதில் சில குறைபாடுகள் இருக்கக் கூடும். எனவே இவற்றை நிவர்த்தி செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

விடுபட்டவர்கள் குறித்து நாளை முதல் ஆய்வு நடத்தப்படும். குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் இப்பணி பூர்த்தி செய்யப்படும். இந்த பணியின் போது சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அர்ச்சனா பட்நாயக் கேட்டுக் கொண்டுள்ளார். வரைவு வாக்காளர் பட்டியல் வருகிற 19–ஆம் தேதி வெளியிடப்படுகிறது. பிப்ரவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

சிறப்பு தீவிரத் திருத்தப் பணி செம்மையான முறையில் பூர்த்தி அடைய வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், குஜராத், கேரளம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய 8 மாநிலங்களுக்கு சிறப்பு பார்வையாளர்களை தலைமைத் தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இந்த சிறப்பு பார்வையாளர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் வாரத்திற்கு 2 நாட்கள் தங்கி பணிகளை மேற்பார்வையிடுவார்கள். மாநில அளவிலான அதிகாரிகளுடனும் மாவட்ட அளவிலான அதிகாரிகளுடனும் நேரடியாகவும் காணொலி வாயிலாகவும் அவ்வப்போது ஆலோசனை நடத்துவார்கள்.

# கேரளாவில் 3259 பேருக்கு எலி காய்ச்சல்

## மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நட்டா தகவல்

**புதுடெல்லி. டிச. 15**

கேரளாவில் லெப்டோஸ்பிரோசிஸ் (எலி காய்ச்சல்) தீவிரமாக பரவி வருவதாக மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நட்டா தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நட்டா மக்களவையில் பேசியதாவது:–



கேரளாவில் லெப்டோஸ்பிரோசிஸ் ஒரு பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 5 வரை கேரளாவில் 3,259 பேருக்கு லெப்டோஸ்பிரோசிஸ் உறுதி செய்யப்பட்டது. 209 பேர் தொடர்புடைய இறப்புகள் ஏற்பட்டன. மேலும், 14 மாவட்டங்களில், திருவனந்தபுரத்தில் அதிகபட்சமாக 583, எர்ணாகுளத்தில் 492, திருச்சூரில் 340 பதிவாகியுள்ளன.

பொது சுகாதாரம் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் வருவதால், கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் நோய் எதிர்ப்பு ஆகியவை முதன்மையாக மாநிலத்தின் பொறுப்பாகும். கேரள அரசு வழங்கிய தகவல்களின்படி, ஜனவரி 1 முதல் டிசம்பர் 5 வரை, 3,259 லெப்டோஸ்பிரோசிஸ் உறுதிப்படுத்தப்பட்ட வழக்குகளும் 209 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

எலி காய்ச்சல் என்று அழைக்கப்படும் லெப்டோஸ்பைரோசிஸ், பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு தொற்று. இந்த நோய் பெரும்பாலும் மழைக்காலத்துடன் தொடர்புடையது. இந்த நிலையில் தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் மூலம் சுகாதார அமைச்சகம், லெப்டோஸ்பிரோசிஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டத்தை 12 உள்ளூர் மாநிலங்கள் மற்றும் குஜராத், கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப்பிரதேசம், அசாம், கோவா, பஞ்சாப், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ யூனியன் பிரதேசங்கள் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தி வருகிறது. தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்களது திட்ட அமலாக்க ஆவணங்களில் முன்வைக்கும் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களுடைய சுகாதார அமைப்புகளை வலுப்படுத்த மத்திய சுகாதார அமைச்சகம் தேவையான தொழில்நுட்பமும் நிதி உதவியும் வழங்கி வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலம், ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேவைக்கேற்ற வகையில் சுகாதார வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

WANTED

THE SOUTH INDIA TIMES

Applications are invited from young, energetic, and talented correspondents, who have flair for writing reports in crisp style and are willing to accept the challenge and work sincerely to grow as a professional with the first-ever regional newspaper like The South India Times, a complete regional paper that showcases all happenings in five southern states besides elsewhere in the country as well as the world, as they unveil

Dist Correspondent & Constituency-wise Stringers, Sub-Editors & Advertisement Executives.

Required Experience: Minimum 2-3 years experience in real-time media. Salary: Negotiable for the right candidates Send your resume / CV.

99122 20350

info.southindiatimes@gmail.com

சிவகாசியில் பயங்கரம்

# தொழிலாளி முகத்தை சிதைத்து கொடூரக்கொலை

## 2 பேர் சிக்கினர்



**சிவகாசி.டிச.15–** சிவகாசி மருது பாண்டியர் நடுத்தெருவில் வசித்தவர் சரவணன்( வயது 55 ). ஒப்பந்த அடிப்படையில் நோட்டுப் புத்தகங்கள் பைண்டிங் செய்யும் தொழில் செய்து வந்தார். கருத்து வேறுபாடு காரணமாக மனைவி மற்றும் மகன்களைப் பிரிந்து தனி வீட்டில் வாழ்ந்து வந்த சரவணனை, அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் அவர் இரவு வீட்டில் தனியாக இருந்தபோது, வீடு புகுந்து அரிவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கி வெட்டிப் படுகொலை செய்து, எரிவாயு சிலிண்டரால் முகத்தையும் கொடூரமாக சிதைத்து விட்டு தப்பியுள்ளனர். தகவலறிந்த சிவகாசி வட்டாரக் காவல் துணைக் கண்காணிப்பாளர் அனில் குமார் தலைமையிலான போலீசார்கள் சம்பவம்நடந்தவீட்டிற்குச் சென்று சரவணனின் பிரேதத்தை மீட்டு உடற்கூறாய்வுக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாகனம் மூலமாக அனுப்பி வைத்தனர்.

கொலையான சரவணனின் மனைவி ஷீலாதேவி சூப்பர் மார்க்கெட்டில் பணிபுரிந்து வரும் நிலையில், மூத்த மகன் அருண் குமார்தூத்துக்குடியில் ஒரு உணவு விடுதியில் வேலை பார்த்து வருகிறார். இளைய மகன் சந்துரு சிவகாசியிலுள்ள தனியார் கல்லூரியில் மூன்றா மாண்டு படித்து வருகிறார்.

ஷீலாதேவி தனது மகனுடன் பக்கத்திலுள்ள மருதுபாண்டியர்மடத்துக் கிழக்குத் தெருவில் தனது தாயார் குருவம்மாளுடன் கணவரைப்பிரிந்துவசித்து வருகிறார். படுகொலை சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள சிவகாசி கிழக்குக் காவல் நிலையப் போலீசார்கள், அப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவிக் கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து கொலையாளிகள் யார்? கொடூரமாக கொலை சம்பவம் செய்ததற்கான காரணம் என்ன? என்பது குறித்து பல்வேறு கோணங்களில் மேல்விசாரணை நடத்தி தப்பியோடிய கொலையாளிகளை வலை வீசித் தேடி வருகின்றனர். மனைவியைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்த நபர் ஒருவர் ஜன நெருக்கடி மிகுந்த, குடியிருப்புகள் நிறைந்துள்ள பகுதிக்குள் அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டச் சம்பவம் சிவகாசி நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனிப்படைப் பிரிவுகளின் போலீசார்விசாரணை மேற்கொண்டு கொலையாளிகளைத் தேடி வரும் நிலையில், கொலை செய்யப்பட்ட சரவணனுக்கும், மற்றொரு பெண்ணுக்கும் தகாத உறவு இருந்து வந்ததாகவும், இதன் காரணமாக அந்தப் பெண்ணின் உறவினர்கள் கொலை சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலா மென்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் போலீசார் தங்களது முதல் கட்ட விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

இது தொடர்பாக 2 பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அலங்காநல்லூரில்

# அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி ஆலோசனைக்கூட்டம்

## ஆர்.பி.உதயகுமார் பங்கேற்பு

**அலங்காநல்லூர்,டிச.15** மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டு கடை தனியார் அரங்கத்தில் அ.தி.மு.க. சார்பில் பூத்கமிட்டி கிளை ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கருப்பையா, மாணிக்கம், மகேந்தின்,ஒன்றிய செயலாளர்கள் அரியூர் ராதாகிருஷ்ணன்,கொரியர் கணேசன், பேரவை துணைச்செயலாளர் ராஜேஷ்கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நகர் செயலாளர் அழகுராஜா வரவேற்றார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு பேசியதாவது:

தற்போது ஒவ்வொரு பூத்துகளில் 9 பேர் கொண்ட குழுக்கள் உள்ளது. இதில் உள்ள ஒவ்வொருவரும் 100 வாக்குகளை அதிமுகவுக்கு ஆதரவாக சேகரிக்க வேண்டும். கடந்த சில மாதங்களாக காலை உணவு உண்ணும் மாணவருடைய

எண்ணிக்கைகள் குறைந்து வருகிறது என தெரிகிறது.மேலும் தற்போது நாட்டில் பாலியல் குற்ற சம்பவங்கள் அதிகமாக நடக்கிறது. சம்பவங்களுக்கு என்ன காரணம் இதற்கு போதை பொருள் நடமாட்டம் தான் காரணம் காவல்துறையின் கரங்கள் கட்டப்பட்டிருக்கிறது இதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது ராமேஸ்வரத்தில் பள்ளிக்குச் சென்ற மாணவி காதலிக்க மறுத்ததால் அவரது உயிர் பறிக்கப்பட்டு இருக்கிறது. இது போன்ற துயர சம்பவங்களை எல்லாம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டாமா பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று மக்கள் கண்ணீர் வடித்து கவலையிலே உள்ளனர்.இந்த சமுதாயத்தில் சட்ட ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் போதை பொருள் நடமாட்டம் இல்லாத சமுதாயத்தை உருவாக்கபட வேண்டும் பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும். மொத்தத்தில் தலை குனிந்து இருக்கும் தமிழகத்தை தலை நிமிர செய்ய வேண்டும். இதற்கு எடப்பாடியார் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக வரவேண்டும் அதற்காக நல்லதீர்ப்பைவழங்க தமிழக மக்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த சோழவந்தான் தொகுதியில் மீண்டும் மக்கள் பேராதரவோடு இரட்டை இலை மலரும் இவ்வாறு அவர் பேசினார்.

நிர்வாகிகள் ஜெயச்சந்திரமணியன்,நாட்டாமை சுந்தர்ராஜ், சுந்தரராகவன் உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்திற்கு

# வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் நியமனம்

**சிவகங்கை, டிச.15** சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம்2026 பணிகள் தொடர்பாக இம் மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளராக அரசு இணைச்செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, (புதுடெல்லி) விஜய் நெஹ்ரா நியமிக்கப்பட்டுள்ளார் எனகலெக்டர் பொற்கொடி தெரிவித்துள்ளார்

சிவகங்கை மாவட்டத்திற்கெனபுதிதாகநியமிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் விஜய் நெஹ்ரா தலைமையில் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர்அலுவலக கூட்ட அரங்கில் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம்2026 குறித்து நடைபெற்று வரும் பணிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்களுடன் கலந்தாய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதில் தங்களது கருத்துக்களை எடுத்துரைக்கலாம் அக்கருத்துக்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு இருப்பின் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

மாவட்டத்தில் எந்தவொரு வாக்காளர்களும் விடுபடாமல் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுகின்ற வகையிலும், வாக்காளர்கள் ஜனநாயக கடமையாற்றுகின்ற வகையிலும் இந்திய தேர்தல் ஆணையத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .அதற்கு உறுதுணையாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து

கட்சிகளை சார்ந்த பிரமுகர்களும் இருந்திடல் வேண்டும் என மாவட்ட வாக்காளர்பட்டியல் சிறப்பு பார்வையாளரும் அரசு இணைச்செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, (புதுடெல்லி) விஜய் நெஹ்ரா தெரிவித்தார்

அதனைத்தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித்தலைவருமான பொற்கொடி தலைமையில் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர்களுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 பணிகள் தொடர்பாக கலந்தாய்வு கூட்டமும் மேற்கொண்டார்

முன்னதாக ஏ.எஸ்.டி. (கண்டறிய இயலாதவர், இடம்பெயர்ந்தவர், இறந்தவர்) பட்டியல் சரிபார்க்கும் பணிகள் தொடர்பாக மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கள ஆய்வுகள் மேற்கொண்டார்

ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி, தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் வட்டாட்சியர்மற்றும்அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்



அம்பாசமுத்திரம் நகராட்சி அனவன் குடியிருப்பு பகுதியில் கரும்பு, பொங்கலுக்கு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன.

கரூர் சம்பவம் குறித்து பதிவு

# சமூக ஊடகவியலாளர் மனு தள்ளுபடி

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, டிச.15** கரூர் கொடுந்துயரம் தொடர்பான வழக்கை சென்னையில் விசாரித்ததை விமர்சித்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி சமூக ஊடகவியலாளர் கிஷோர் கே ஸ்வாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னைஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சமூக ஊடகவியலாளரும், அரசியல் விமர்சகருமான கிஷோர் கே ஸ்வாமி தாக்கல் செய்துள்ள மனுவில், கரூரில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் நடத்திய மக்கள்சந்திப்புநிகழ்ச்சியில் 41 பேர் மரணமடைந்தது தொடர்பாக மதுரை கிளையில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், ஒரு வழக்கை மட்டும் சென்னையில் விசாரித்த தனி நீதிபதி தெரிவித்த கருத்துகள் தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தின் தனது பக்கத்தில் அக்டோபர் 3 ஆம் தேதி, “யார் யாருக்கு தலைமைத்துவ பண்பு இருக்கிறது என்பதை ஆராய்வது நீதிமன்றத்தின் வேலை கிடையாது. சட்டம் மீறப்பட்டிருந்தால் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கலாம். மற்ற கருத்துக்கள் அவசியமற்றது.” என்று பதிவிட்டிருந்தகாகவும், அதுதொடர்பாக ஆலந்தூரரை சேர்ந்த கே. நன்மாறன் என்பவர் காவல்நிலையத்தில்புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், தன் மீது பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் கீழ் ஆபாசமான செயல்பாடு (296), கலவரத்தை தூண்டுதல் செய்தல் (192 ), பகைமையை ஊக்குவித்தல் (196), பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் அறிக்கை வெளியிடுதல் (353) ஆகிய நான்கு பிரிவுகளிலும், தகவல் தொழிநுட்ப சட்டத்தின் 67 வது பிரிவான மின்னணு வடிவத்தில் ஆபாசமான விஷயங்களை வெளியிடுதல் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், அது தொடர்பான விசாரணை சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது பதிவில் எந்தவித மான ஆபாசமான வார்த்தைகளும் இல்லாத நிலையில் அவதூறு மொழியை பயன்படுத்தியதாகக் கருத முடியாது என்பதால் தன் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா முன்பு விசாரணைக்கு வந்தபோது, அரசு குற்றவியல் வழக்கறிஞர் எஸ். சந்தோஷ் ஆஜராகி பதவியில் இருக்கும் நீதிபதி மீது உள்நோக்கம் கற்பித்துள்ளதாகவும், அது நியாயமான விமர்சனம் இல்லை என்றும், அதிலிருந்து அவர் தப்பித்துக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

இதுபோன்ற குற்றத்தை மனுதாரர் தொடர்ந்து செய்வதாலும், விசாரணை ஆரம்ப கட்டத்தில் இருப்பதாலும், அவர் மீதான வழக்கை ரத்து செய்யக்கூடாது எனகடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களுக்கு பின்னர் உத்தரவு பிறப்பித்த நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, வழக்கை ரத்து செய்யக் கோரிய கிஷோர் கேஎ ஸ்வாமியின் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

சென்னையில் இருந்து

# நாகர்கோவில் நோக்கி வந்த தனியார் பேருந்து சுவரில் மோதி கவிழ்ந்தது

## வெளிநாட்டு பயணி உட்பட 40 பேர் படுகாயம்

**நாகர்கோவில், டிச. 15–** கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை அடுத்த விசுவாசபுரம் பகுதியில் சாலையின் நடுவே வைத்துள்ள சென்டர் மீடியானில் சென்னையில் இருந்து நாகர்கோவில் நோக்கி வந்த தனியார் பேருந்து மோதி கவிழ்ந்து விபத்து மேலும் தனியார் பேருந்துகவிழ்ந்துவிழுந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த வெளிநாட்டு பயணிகள்,உள்பட 40 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதில் மூன்று குழந்தைகள் உட்பட பல பெண்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சம்பவம் நடந்த இடத்திற்கு ஆரல்வாய் மொழி காவல் துறையினர் உடனடியாக வந்து துரித மீட்பு பணியில் ஈடுபட்டு ஆம்புலன்ஸ் வாகனம் வரவழைக்கப்பட்டு காயம் அடைந்த பயணிகளை அருகில் உள்ள மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது மேலும் அதிஷ்டவசமாக உயிர் சேதம் ஏற்படவில்லை என கூறப்படுகிறது.

இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்,மேலும் அந்த சாலையில் உள்ள சென்டர் மீடியனாலும், சாலையின் இருபுறம் சாலைக் குறியீடுகள் இல்லாததும், சாலையோரம் மின் விளக்குகள் இல்லாமல் இருள் சூழ்ந்து காணப்படுவதும் , சாலையை இரண்டாக பிரித்துநடுவேகல்வைத்து உள்ளதால் சாலையின் இருபுறமும் மிக குறுகலாக ஒரு வாகனம் மட்டுமே செல்லும் அளவில் காணப்படுவதால் தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு வருவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.



சென்னையில் இருந்து நாகர்கோவில் நோக்கி வந்த தனியார் பஸ் தோவாளை அருகே தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்தது.

மெட்ராஸ் மணி

டிச 15 2025 திங்கட்கிழமை

# “தவறான ஆட்சிக்கு அதனைத் தேர்ந்தெடுத்த மக்களே பொறுப்பு” - சீமான்

மதுரை: தமிழகத்தில் நடக்கும் தவறான ஆட்சிக்கு ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என, மதுரையில் சீமான் கூறினார்.

சென்னையில் இருந்து ஈரோடு செல்ல விமானம் மூலம் நாம்தமிழர்கட்சி ஒருங்கிணைப்பாளர்சீமான் மதுரை வந்தார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தற்போது போராட்டம் நடத்துகின்றனர்.

இக்கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைகள் தான். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இது போன்ற போராட்டத்தில் மு.க.ஸ்டாலின் பங்கேற்றிருக்கிறார். நான் அரசு ஊழியர்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்து பங்கேற்கிறேன். ஓய்வூதியத்துக்குப் பயந்து பணி நிரந்தரம் செய்யாமல் ஆசிரியர்களை ஒப்பந்தம், பகுதி நேர பணியில் வைத்துள்ளனர்.

அரசு நிர்வாகத்தை முறையாக செயல்படுத்தவில்லை. ஓய்வு பெறும் வயது 58-ல் இருந்து 60 ஆக அதிகரித்தது ஏன். ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் கொடுக்க உங்களிடம் நிதியில்லை. இது போன்ற சூழலில் படித்த இளைஞர்கள் அரசு வேலைக்கு போகமுடியவில்லை. அரசுப்பணியென எதுவுமின்றி எல்லாவற்றையும் தனியார் முதலாளிகளிடம் ஒப்பந்தம் கொடுத்துள்ளனர். தூய்மைப் பணிகளும் தனியார் முதலாளிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது அரசு தான். தனியார் முதலாளிகள் லாபமின்றி எதையும் செய்வதில்லை. தமிழகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள ஆந்திரா முதலாளிகளுக்கு என்ன ஆசையா?

தமிழக போக்குவரத்து தொழிலாளர்களிடம் பிடித்த தொகை ரூ.7500 கோடி என்ன ஆனது. இதைக் கேட்டு எத்தனை முறை போராடினார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது, நாங்கள் வந்தவுடன்நிறைவேற்றுவோம்எனச்சொல்கிறீர்கள். ஆளுங்கட்சியாக வந்தபிறகு தூக்கி தூரப் போடுகிறீர்கள். தவறான ஆட்சி நடக்குது என்றால் அதற்கு ஆட்சியாளர் பொறுப்பல்ல. ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

கேரளமாநிலஉள்ளாட்சித்தேர்தலில்காங்கிரஸும், கம்யூனிஸ்ட்டும் அதிக இடங்களை வென்று இருந்தாலும்,நம்மஊர்அரசியலைப்பேசவேண்டும். இவ்வாறு சீமான் கூறினார்.

அதிமுகவில் அதிருப்தியில் இருக்கும் முக்கியத் தலைவர்களை தவெக பக்கம் கொண்டு வந்து, அக்கட்சியை வலுப்படுத்துவேன் என, செங்கோட்டையன் கூறுவது குறித்து செய்தி யாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீமான் பதிலளிக்காமல் சிரித்துக்கொண்டே ‘‘கல்யாணத்துக்கு செல்கிறேன்’’ எனக் கடந்துவிட்டார்.

ராஜபாளையத்தில்

# பெண் தொழிலாளியிடம் கந்துவட்டி கேட்டு கொடுமை

## பெண் உட்பட 2 பேர் கைது

**ராஜபாளையம், டிச.15 –** ராஜபாளையம் லட்சமியாபுரம் தெருவைச்சேர்ந்தவர் முனீஸ்வரி (30) கூலி தொழிலாளி. இவரது கணவர் இறந்துவிட்டார், 2 குழந்தைகளுடன் தனியே வசித்து வருகிறார். மூத்த மகன் மாற்றுத்திறனாளி, அவரது மருத்துவச்செலவிற்காக ராஜபாளையம் அருகேலுள்ள சேத்தூர் பசும்பொன் நகரைச் சேர்ந்த பாண்டி (40) என்பவரிடம் ரூ.20 ஆயிரம் கடன் கேட்டுள்ளார்.

டாக்குமெண்ட் செலவு வட்டியென ரூ.8000 எடுத்துக்கொண்டு ரூ.12 ஆயிரம் கொடுத்துள்ளனர். இதனை தவணை முறையில் ரூ.20 ஆயிரத்தை கட்டி முடித்துள்ளார். காலதாமதமாக பணம் கட்டியதாகக் கூறி இன்னும் ரூ. 5 ஆயிரம் கட்ட வேண்டும் என்று சொல்லிவுள்ளனர். இந்நிலையில் முனீஸ்வரியை சசிக்குமார் மனைவி ராணி என்பவர் காலை வேளையில் வீட்டிற்கு வரச்சொல்லிவுள்ளார். அங்கு சென்றயிடத்தில் பாண்டி மற்றும் ராணி இருவரும் சேர்ந்து பணத்தைக் கொடு இல்லையேல்உன்வீட்டிலுள்ள பொருள்களை தூக்கி வெளியே வீசிவிட்டு வீட்டை பூட்டி விடுவோம் என சொல்லி மாலை வரை வீட்டில் அடைத்துவைத்துள்ளனர்.

மேலும் இந்தவிசயத்தை வெளியே சொன்னால் கொன்றுபுதைத்துவிடுவோம்மென மிரட்டல் விடுத்து அங்கிருந்து அனுப்பிவைத்துள்ளனர். இது குறித்து ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தி ல் முனீஸ்வரி புகார் அளித்தார். புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து ராணி, பாண்டி ஆகிய இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கோபி அருகே

# வாய்க்காலில் மிதந்த ஆண் பிணம்

## யார் அவர்? போலீஸ் விசாரணை

**கோபி, டிச.15** கோபி அருகே அவ்வையார்பாளையத்தில் கீழ்பவானி வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்காலில் நேற்று 60 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பிணம் அழுகிய நிலையில் மிதந்தது.

இதுகுறித்து அந்த வழியாக சென்றவர்கள் கோபி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் விரைந்து வந்த போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோபி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

பிணமாக மிதந்தவர் யார்? எந்த ஊரைச்சேர்ந்தவர்?, எப்படி இறந்தார்? என்று கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### கூடங்குளம் அணு உலைக்கு

## ரஷ்யாவிலிருந்து வந்த யுரேனியம் எரிபொருள்

**வள்ளியூர், டிச.** 15

திருநெல்வேலி மாவட்டம். கூடங்குளத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3ஆவது அணுஉலைக்கு மேம்படுத்தப்பட்ட யுரேனியம் அணு எரிபொருள் ரஷிய நாட்டிவிருந்து கூடங்குளம் அணுஉலைக்கு வெள்ளிக்கிழமை இரவு மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரின் பலத்த பாதுகாப்புடன் வந்து சேர்ந்தது.

ரஷிய நாட்டின் கூட்டுறவுடன் உருவாக்கப்பட்டுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட 2 அணு உலைகள் செயல்பட்டு வருகிறது. இதுதவிர 3 மற்றும் 4 ஆவது அணு உலைகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்தது. இதில் 3–ஆவது அணு உலைக்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்து மின் உற்பத்தி செய்வதற்கான நிலையை எட்டியுள்ளது. வழக்கமாக அணு உலைகளில் ஆண்டுக்கொருமுறை எரிபொருள்கள் மாற்றப்பட்டு வருகிறது. தற்போது தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடுத்து 18 மாதங்களுக்கு ஒருமுறை மட்டும் எரி பொருள் மாற்றக் கூடிய மேம்பாட்டு நிலையை கூடங்குளம் அணுமின் நிலையம் எட்டியுள்ளது.

அந்த வகையில்தான் 3–ஆவது அணு உலைக்கு 18 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றக் கூடிய வகையிலான மேம்படுத்தப்பட்ட யுரேனியம் எரி பொருள் வந்துள்ளது. இதை ரஷ்ய நாட்டிலுள்ள அணுசக்தி கழகம் ரோசாட்டம் விமானம் மூலம் அனுப்பியுள்ளது.

இனி செறிவூட்டப்பட்ட யுரேனியம் எரி பொருளானது ஒரு ஆண்டுக்குப் பதிலாக 18 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றினால் போது மானது என அணுஉலை வட்டாரத்தில் தெரி வித்தனர்.

தற்போது இரண்டாவது அணு உலையில், பராமரிப்புப் பணிகளுக்காக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

### கயத்தாறு அருகே

## பெண்ணை தாக்கி 3 பவுன் தங்க நகை பறிப்பு

### மர்ம ஆசாமிக்கு வலைவீச்சு

**கோவில்பட்டி, டிச:**15

கயத்தார் அருகேயுள்ள தெற்கு இலந்தைகுளம் கிராமத்தை சேர்ந்தவர் சுடலைமணி. இவர் சென்னையில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி பூமாடத்தி(39). இவர் கயந்தாறில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். சுடலை மணி சென்னையில் இருக்க பூமாடத்தி தனது இரண்டு குழந்தைகளுடன் தெற்கு இலந்தை குளத்தில் வசித்து வருகிறார். இவர்களது வீடு ஊரிலிருந்து சற்று தள்ளி உள்ளது. நேற்று முன்தினம் இவு குழந்தைகள் அருகிலுள்ள கோவிலுக்கு சாமி கும்பிட சென்ற நிலையில் , வீட்டில் பூமாடத்தி தனியாக இருந்துள்ளார். வீட்டில் முன் பகுதியில் உள்ள திறந்தவெளி துணிகளை துவைத்து விட்டு, துணி உலர்த்த வெளியே வர முயன்ற போது, அவரது கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க நகையை யாரோ ஒருவர் பிடித்து இழுத்து உள்ளார். குளியலறை ஒட்டி இருந்த மாடிபடியில் இருந்து இழுத்துள்ளார். தனது நகையை பறிக்க விடாமல் இரண்டு கைகளாலும் பூமாடத்தி பிடித்துக் கொண்டு போராடியுள்ளார். ஆனால் அந்த மர்மநபர்விடாதுநகையை பறிக்க முயன்றது மட்டுமின்றி, மாடிப்படியில் இருந்து குளியலறைக்குள் குதித்து பூமாடத்தியை தாக்கி விட்டு நகையை பறித்துக் கொண்டு ஓடியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பூமாடத்தி அருகில் இருந்தவர்கள் மூலமாக கயத்தாறு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்.

போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும் வழக்கு பதிவு செய்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.

## காகிதத்திற்கான ஜி.எஸ்.டி. வரியை ஒரே நிலையில் விதிக்க வேண்டும்

### மத்திய அரசுக்கு காலண்டர் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை

**சிவகாசி, டிச.**15–



தமிழ்நாடு காலண்டர் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ஜெய்சங்கர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிவகாசியில் காலண்டர் உற்பத்தியில் இறுதிக்கட்டப் பணிகள் மும்மரமாக விறுவிறுப்போடு நடந்து கொண்டிருக்கிறது. வழக்கம் போல காலண்டர்களுக்கான ஆர்டர்கள் நெருங்கி வந்து விட்டாலும், எஞ்சியுள்ள ஆர்டர்களும் வருடத்தின் இறுதி நாட்களில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உற்பத்தியாளர்கள் காத்திருக்கின்றனர். தரத்துடன், புதுமை யையும் எதிர் நோக்கும் வாடிக்கையாளர்களின் விருப்பத்தி ற்கேற்ப காலண்டர் தயாரித்து பூர்த்தி செய்யப்படுகிறது. கையடக்க அளவிலான காலண்டரின் தொடக்க விலையான ரூபாய் 15 லிருந்து, மெகா சைஸ் வடிவமைப்பில் ரூபாய் 5 ஆயிரம் வரையிலான காலண்டர்கள் தயாரித்து விற்பனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு வரப்படுகிறது. 5 வருடங்களுக்கு ஒருமுறை சட்டமன்றத் தேர்தல் வரும் சமயங்களில் வழக்கமான அரசியல் கட்சிகளின் காலண்டர் ஆர்டர்களை விட தேர்தல் காலங்களில் 10 சதவீதம் காலண்டர் உற்பத்தி அதிகரிக்கும். அதேபோன்று எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான கால கட்டத்தில் அரசியல் கட்சிகளின் காலண்டர் தேவை கூடுதலாயிருக்கு மென்பதால் அதிகமான அளவு காலண்டர் ஆர்டர் வருமென எதிர்பார்ப்பதாகவும், தைப்பொங்கல் தினத்தன்று வரை காலண்டர் உற்பத்தி வழக்கம் போல நடந்து வந்த நிலையில், புதிதாக பல்வேறு அரசியல் கட்சிகள் களத்தில் உதயமாகியுள்ளதால் அதிகப்படியான காலண்டர் ஆர்டர்கள் மென்மேலும் கிடைக்கப்பெற்று ஜனவரி மாதம் முழுவதும் காலண்டர் உற்பத்திக்கான பணிகள் நடைபெறும். காகிதத்திற்கான ஜிஎஸ்டி வரி காலண்டர், டைரிகளுக்கு 18 சதவீதம், லேபிள் போன்றவை களுக்கு 5சதவீதம், நோட்டுப் புத்தகங்களுக்கு வரி ரத்து என மூன்று விதமான பிரிவுகளில் விதிக்கப்பட்டிருப்பதை ஒன்றிய அரசு ஒரே நிலையில் காகிதத்திற்கு 5 சதவீதம் மட்டுமே என சீரான ஜிஎஸ்டி வரி விதிக்கும் பட்சத்தில் அச்சகத் தொழில் சிறப்பாக நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பூரண மதுவிலக்கு தோல்வியடைந்த திட்டம்

### கார்த்தி சிதம்பரம் எம்.பி. கருத்து

**புதுக்கோட்டை, டிச.** 15–



'நாடு முழுவதும் பூரண மதுவிலக்கு என்பது தோல்வியடைந்த திட்டம்' என சிவகங்கை தொகுதி எம்.பி. கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் தனது தொகுதி நிதியில் இருந்து ரூ.6.77 லட்சத்தில் அமைக்கப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தை நேற்று திறந்துவைத்த அவர், பின்னர்செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் ஏற்கெனவே உள்ள கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை அரசு விரிவுபடுத்தி உள்ளது.

இது குறித்து விமர்சிக்கும் பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, பிஹாரில் ரூ.10 ஆயிரம் வழங்கியது குறித்து கருத்து தெரிவித்திருக்க வேண்டும்.

நாடு முழுவதும் பூரண மதுவிலக்கு என்பது தோல்வி அடைந்த திட்டம். இந்த திட்டம் எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. மதுவை கட்டுப்படுத்தலாமே தவிர, முழுமையாக தடை செய்ய முடியாது. குஜராத்தில் பூரண மதுவிலக்கு என்பது காகிதத்தில்தான் இருக்கிறது. காந்தி பிறந்த ஊரான போர்பந்தரிலேயே மது இறக்குமதி செய்யப்படுகிறது.

ஒரு மாநிலத்தின் தேர்தல் இலக்கணம் மற்றொரு மாநிலத்துக்குப் பொருந்தாது. அந்தந்த மாநில கூட்டணி, அரசியல் நிலவரப்படிதான் தேர்தல் முடிவுகள் இருக்கும். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் தேர்தல் வரும் போது தமிழகத்துக்கு வருவார்கள்.

தமிழ் உணவு, தமிழ் மொழிதான் பிடிக்கும் என்பார்கள். புலம்பெயரும் பறவைகளைப் போல தேர்தலுக்காக வந்து விட்டு செல்வார்களே தவிர, அவர்களுக்கு தமிழகத்தைப் பற்றி எந்த அக்கறையும் இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

### வந்தே மாதரம்' 150–ஆம் ஆண்டு விழா

## மாநில அளவில் கட்டுரை போட்டி அறிவிப்பு

### ஆளுநர் மாளிகை தகவல்

**சென்னை, டிச.** 15:

'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப்போட்டி கள் நடத்தப்படுவதாக தமிழக ஆளுநர் மாளிகைஅறிவித்துள்ளது.

இதுகுறித்து ஆளுநர் மாளிகை சார்பில் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்ட வரலாற் றுச் சிறப்பு மிக்க 'வந்தே மாதரம்' பாடலின் 150ஆவது ஆண்டைக் கொண்டாடும் விதமாக, தமிழக பள்ளி மற்றும் பல்கலைக் கழகம், கல் லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டி நடத்தப்படுகிறது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் மற் றும் ஆங்கிலத்தில் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்படும். பள்ளி மாணவர்களுக்கு 'இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வந்தே மாதரம் பாடலின் பங்களிப்பு', 'வந்தே மாதரம் பாடலால் விழித்தெழுந்த பாரதம்' ஆகிய தலைப்புகளில் அதிகபட்சம் 10 பக்கங்கள் (ஒரு பக்கத்திற்கு 20 வரிகள் என மொத்தம் 1,500 முதல் 2,000 வார்த்தைகள்) இருக்க வேண்டும்.

கல்லூரி மாணவர்களுக்கு '2047இல் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் வந்தே மாதரம் பாடலின் பொருத்தப்பாடு' என்ற தலைப்பில் அதிகபட்சம் 15 பக்கங்கள் (ஒரு பக்கத்திற்கு 20 வரிகள் மற் றும் மொத்தம் 2,500 முதல் 3,000 வார்த்தைகள்) இருக்க வேண்டும்.

பங்கேற்பாளர்கள் கையால் எழுதப்பட்ட கட்டுரைகளின் அசல் பிரதியை வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி மாலை 5 மணிக்குள் ஆளுநரின் துணைச் செயலர் (பல்கலைக்கழகங்கள்),ஆளு நர் செயலகம், லோக் பவன், சென்னை 600 022 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும், முதல் பரிசு பெறும் மாணவருக்கு ரூ.50,000, இரண்டாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ.30,000, மூன்றாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ.25,000 வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விதிமீறி உரிமைத்தன்மை வழங்கி

## அரசுக்கு ரூ. 3.72 லட்சம் இழப்பீடு செய்த வாகன ஆய்வாளர் மீது வழக்கு

**சிவகங்கை, டிச.**15–

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் விதிமீறி வாகனத்திற்கு உரிமை தன்மை வழங்கி அரசுக்கு ரூ. 3.72 லட்சம் நிதி இழப்பீடு செய்த வாகன ஆய்வாளர் மீது மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மோட்டார்வாகனவிதிமுறைகளுக்கு மீறி கூடுதல் பயணிகளை ஏற்றிச் செல்லும் வகையில் மாற்றி அமைக்கப்பட்ட மூன்று வேண்டுகளுக்கு தகுதி சான்று வழங்கியதற்காக இம்மாவட்டம் காரைக்குடியில் கடந்த 2023 ஆம் ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளராக பணியாற்றிய விஜயகுமார் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்து உள்ளனர்.

12 பேர் மட்டுமே பயணிக்கக்கூடிய மூன்று வாகனத்திற்கு பதிவுச் சான்று வழங்க வேண்டிய நிலையில் ஒரு வாகனத்திற்கு 25 பேர் பயணிக்கும் வகையிலும் மற்ற இரண்டு வாகனங்களுக்கு 22 பேர் பயணிக்கும் வகையில் சான்று வழங்கப்பட்டுள்ளது இது குறித்த புகார் மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிய வந்துள்ளது.

மாவட்டஊழல்தடுப்பு கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் ஜான் பிரிட்டோ ஆய்வாளர்கள் ஜேசுதாஸ் மற்றும் கண்ணன் ஆகியோர் இது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர் விசாரணையின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் விதிமுறைகளை மீறி கூடுதல் பயணிகளை ஏற்று செல்லும் வகையில் மாற்றி அமைக்கப்பட்ட மூன்று வேன்களுக்கும் தகுதிச் சான்று வழங்கியுள்ளார் இதன் மூலம் அரசிற்கு 3 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இது குறித்து ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு போலீசார் மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் மீது வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் அப்பொழுது காரைக்குடியில் பணியாற்றிய மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் தற்பொழுது கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் முதல் நிலை மோட்டார் வாகன ஆய்வாளராக பணியாற்றி வருகிறார் என்பது தெரியவந்துள்ளது.

### தூத்துக்குடியிலிருந்து

## இலங்கைக்கு ரூ.50 லட்சம் பீடி இலை கடத்தல்

### கடலோர காவல் படை போலீசார் பறிமுதல்

**தூத்துக்குடி, டிச.**15

தூத்துக்குடி மாவட்ட கடற் பகுதி வழியாக இலங்கைக்கு தொடர்ந்து பீடி இலைகள் ,மாத்திரைகள் ,பட்டாசு ,மஞ்சள் ,அழகு சாதனப் பொருட்கள் ஆகியவை தொடர்ந்து உரிய ஆவணங்கள் இன்றி படகுமூலம் கடத்தப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை அவ்வப்போது கடலோர காவல் படை போலீசார் மற்றும் கியூ பிரிவு காவல் துறையினர் சோதனை மூலம் தடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை திரேஷ் புரம் கடற் பகுதி வழியாக இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தப்படுவதாக கடலோர காவல் படை ஆய்வாளர் பேச்சிமுத்துவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடலோர காவல் படை போலீசார் திரேஸ்புரம் கடற்கரையில் சோதனை செய்தனர். அப்போது அங்கே படகு மூலம் இலங்கைக்கு கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த ரூபாய் 50 லட்சம் மதிப்பிலான 81 பண்டல்களில் இருந்த 2835 கிலோ பீடி இலைகளை பறிமுதல் செய்தனர். இந்த கடத்தலில் ஈடுபட்டு தப்பி ஓடிய கடத்தல் கும்பலை கடலோர காவல் படையினர் தேடி வருகின்றனர்.

### தமிழகத்தில்

## இன்றும் நாளையும் குளிர் அதிகரிக்க வாய்ப்பு

**சென்னை,டிச.**15–

தமிழகத்தில் இன்றும், நாளையும் குளிர் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது.

இதன் காரணமாக, தென் தமிழகம், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் மற்ற பகுதிகள், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவும். தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் அதிகாலையில் பனி மூட்டம் காணப்படும்.

டிச.15, 16ம் தேதிகளில் கடலோர தமிழகத்திலும், 17ம் தேதி தமிழகத்தில் பரவலாகவும், 18, 19ம் தேதிகளில் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் குறைவான வெப்பநிலை பதிவாகி வருகிறது.

நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மலைப்பகுதியை பொருத்தவரை ஊட்டியில் 7 டிகிரி, கொடைக்கானல், குன்னூரில் 9 டிகிரி, ஏற்காட்டில் 10 டிகிரி, சமவெளிப் பகுதியை பொருத்தவரை திருத்தணியில் 16 டிகிரி, வேலூர், தருமபுரியில் 17 டிகிரி, புதுச்சேரி, சேலத்தில் 19 டிகிரி, சென்னை நுங்கம் பாக்கம், மீனம்பாக்கம், மாமல்லபுரம், கோவையில் 20 டிகிரி குளிர் பதிவாகியுள்ளது. தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் (டிச.14, 15) குறைந்தபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக் கூடும்.

இதனால், கடும் குளிர் நிலவும்.

### காமராஜர் குறித்து அவதூறு

## யூ.டியூபரை கண்டித்து சத்ரிய நாடார் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

### ராமநாதபுரத்தில் நடந்தது

**ராமநாதபுரம்,டிச,**15

முன்னாள்முதலமைச்சர் பெருந்தலைவர்காமராஜர் குறித்தும், நாடார் சமுதாயத்தைப்பற்றியும் அவதூறு கருத்துக்களை வெளியிட்ட யூட்யூபர் முக்தார் அகமது என்பவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி அகில இந்திய சத்ரிய நாடார் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் காந்திராஜன் தலைமை வகித்தார். மாநில துணை தலைவர் செல்வம் வரவேற்றார். நாடார் மஹாஜன சங்க செயலாளர்மோகன், பத்மநாபன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நிறுவனத்தலைவர் வீரமணி கலந்து கொண்டு பேசினார். ஆர்ப்பாட்டத்தில் காமராஜர் பற்றி அவதூறு கருத்துக்களை வெளியிட்ட யூட்யூபரை கைது செய்ய வலியுறுத்தி கோசங்களை எழுப்பினர். மேலும் ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் செயலாளர் ஜெகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் ஆனந்த பாபு நன்றி கூறினார்.



அகில இந்திய சத்ரிய நாடார் சங்கம் சார்பில் காமராஜர் குறித்து அவதூறு கருத்துக்களை வெளியிட்ட யூட்யூபரை கைது செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

## ஜனவரி 9-ல் கூட்டணியை அறிவிப்போம்

### பிரேமலதா விஜயகாந்த் தகவல்

**சென்னை, டிச.** 15–

ஜன.9ம் தேதி கூட்டணி அறிவிப்பு வெளியாகும் என்றும் பொங்கலுக்கு பின் தமிழகத்தின் அரசியலுக்கு நல்ல வழி பிறக்கும் எனவும் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேமுதிக இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரனின் பிறந்த நாளை யொட்டி சென்னை, கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மரியாதை செலுத்தினார்.

இதனையடுத்து, விஜயகாந்த் நினைவிடத்தில் பொதுமக்களுக்கு பிரேமலதா விஜய காந்த் உணவு வழங்கினார்.

இதை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது: விஜய பிரபாகரன், விமானம் தாமதம் காரணமாக இங்கு வரவில்லை. உரிய நேரத்தில் விருப்ப மனு விநியோகம் குறித்து அறிவிப்போம். கேப்டன் குருபூஜைக்கான பணிகள் நடை பெற்று வருகின்றன. உள்ளம் தேடி, இல்லம் நாடி பிரச்சாரப் பயணம் வெற்றிகரமாக 3 கட்டங்கள் நடந்து முடிந்துள்ளது.

அனைத்து இடங்களிலும் பூத் கமிட்டி அமைக்கப்பட்டு பிஎல்ஏ2 படிவங்களுக்கான பணிகள் முடித்து தேர்தலுக்கு தேமுதிக தயாராக உள்ளது. ஜனவரி 9ம் தேதி கடலூர் மாநாட்டுக்காக தேமுதிக நிர்வாகிகள் தயாராகி வருகின்றனர். மாநாட்டில் ஒரு நல்ல அறிவிப்பு கிடைக்கும். தைப் பிறந்தால் வழிபிறக்கும் என்பது போல பொங்கலுக்குப் பின்னர் தமிழகத்தின் அரசியலுக்கும் நல்ல வழி பிறக்கும்.

தேமுதிக நிர்வாகிகள் உடன் தேர்தலுக்கான ஆலோசனைகள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. நிர்வாகிகள் உடன்தினமும் பேசி வருகிறோம். கேப்டன்காலத்தில் இருந்தே தேமுதிகவுக்கு மாநிலக் கட்சிகளும், மத்தியில் உள்ள கட்சிகளும் தோழமைக் கட்சிகள் தான். தேமுதிகவோடு அனைவரும் தோழமையோடும் நட்போடும் உள்ளனர். கூட்டணி குறித்தோ, யாருடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து உரியநேரத்தில் நல்ல தகவலை அளிப்போம்.கடலூர் மாநாட்டுக்குள் கூட்டணி குறித்துநல்ல முடிவு வரும். யாருடன் கூட்டணி, எந்தெந்த தொகுதிகள், எத்தனை தொகுதிகள் என்பது குறித்து ஜனவரி 9ம் தேதி தெரிவிக்கப்படும். 2026 தேர்தலில் 234 தொகுதிகளும் எங்களுக்கு இலக்குதான். என்றாலும் அதிகாரபூர்வமாக தேமுதிகவுடன் இதுவரை யாரும் கூட்டணிப் பேச்சு வார்த்தையைத் தொடங்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

MANAPPURAM HOME FINANCE LTD.
மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
முன்னர் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN:U65923KL2010PLC039179
யூனிட் 301-315, 3வது தளம், ஏ விங், கனகியா வால் ஸ்ட்ரீட், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை - 400093 தொடர்பு எண்: 022-68194000/022-66211000.

**உடைமை அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)**

கீழே கையொப்பமிடப்பட்டவர் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் ("MAHOFIN") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருப்பதால், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கம் *[சட்டம்], 2002 (54 of 2002) இன் கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் பிரிவு 13(12) உடன் சேர்த்து வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடன் வாங்குபவர்கள் மற்றும் இணை கடன் வாங்குபவர்கள் அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பிலும் அதன் மீதான வட்டியிலும் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிடப்பட்டவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை உண்மையில் உடைமையாக்கிக் கொண்டுள்ளார் என்று கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. மேற்கூறிய விதிகளின் பிரிவு 13(4) இன் கீழ் அவருக்கு/அவளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி *[சட்டம்] விதி 9 உடன் சேர்த்து வாசிக்கப்பட்டது. குறிப்பாக கடன் வாங்குபவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் பொறுப்பிற்கு உட்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, அந்தந்த சொத்துக்கள் ஒவ்வொன்றிற்கும்:

| வ எண் | கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் இணை கடன் வாங்குபவரின் பெயர்/ கடன் கணக்கு எண்/கிளை | வட்டி உருவாக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்தின் விளக்கம் | கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி & நிலுவையில் உள்ள தொகை | உண்மையான உடைமை தேதி |
|---|---|---|---|---|
| 1 | ராஜேஸ்வரி ஏ & லோகநாதன் எம் / MHL00410014088/ காஞ்சிபுரம் | விரிவு 1820 சதுர அடி, ஆர்.எஸ்.எண்.30/4 பகுதி, சின்னா தெரு, தர்மநீதி கிராமம், அரக்கோணம் தாலுகா, மாரியம்மன் கோயில் அருகில், மாவட்டம்-ராணிப்பேட்டை, வேலூர், தமிழ்நாடு, பின்: 632531 | 03-09-2024 & ரூ. 7,83,964/- | 10-12-2025 |
| 2 | சிவகாமி எஸ்,ஷிவேந்த்குமார் சாகேத் & சாந்தி இ / MHL00170015967 / நாகர்கோவில் | புதிய SY.NO.150/5 பழைய SY.No.165 உடன் தொடர்புடையது, 5 செண்ட் பரப்பளவு 2178 சதுர அடி, கதவு எண். 8-37, ஏசாந்திமங்கலம் கிராமம் இப்போது ஏசாந்திமங்கலம் தெற்கு கிராமம், தோவாளை தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு, பின்: 629852 | 14-04-2025 & ரூ. 5,21,669/- | 09-12-2025 |

தேதி: 15 டிசம்பர்-2025
இடம்: தமிழ்நாடு
எஸ்டி/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்



திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோவில் கடல் சீற்றத்தால், மண்ணரிப்பு ஏற்பட்டு சுமார் 6 அடி பள்ளம் உருவானது.

## ஆதிதிராவிட மாணவர்களின் விடுதி காப்பாளர் தற்கொலைக்கு காரணமானவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

### எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை,டிச.15–**

ஆதிதிராவிட மாணவர் விடுதி காப்பாளர் தற்கொலைக்கு காரணமானவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, தத்தங்குடியில் அரசு ஆதிதிராவிடர்நலதொடக்கப் பள்ளியில், இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றிய மகேந்திரன் என்பவர் மணல்மேடு ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு காப்பாளராக, பணிமாற்றம் செய்யப்பட்டார்.வயதான தாய், தந்தை, கைக்குழந்தையுடன் உள்ள தனது குடும்பத்துக்கு, தனது நேரடி உதவி அவசியம் என்பதால், தன்னை மீண்டும் ஆசிரியர் பணிக்கு பணி மாறுதல் செய்து தருமாறு பலமுறை கோரிக்கைவைத்தார்.

மேலும் விடுதி மாணவர்களுக்கு உணவுப்படி கடந்த 4 மாதங்களாக வழங்காததால், தனது கைப்பணத்தையும், கடன் வாங்கியும் செலவு செய்துள்ளார்.

இதனால் தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாமல் உள்ள நிலையைச் சுட்டிக்காட்டி, தனக்கு பழைய பணிக்கே மாறுதல் வழங்க வேண்டும் என்று உயர்அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.அதற்கும் பதில் வராததாலும், பணக் கஷ்டத்தினாலும், குடும்பத்தை விட்டு பிரிந்து இருந்ததினாலும் மன அழுத்தம் ஏற்பட்டு, 3 நாட்களுக்கு முன் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

திமுக ஆட்சியில், ஆதிதிராவிட மக்களுக்கான நலத்திட்டங்கள் முழுமையாகச் சென்றடைவதில்லை. குறிப்பாக, ஆதிதிரா விடர் மாணவர் விடுதிகளுக்கு உரிய காலத்தில் நிதியை விடுவிக்காத திமுக அரசுக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனியாவது ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கான நிதியை உடனே விடுவிக்க வேண்டும். மகேந்திரன் தற்கொலைக்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவரது குடும்பத்துக்கு உரிய நிவாரணம் அளிப்பதுடன், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இளைஞர்கள் அதிகம் செலவு செய்வது எதற்கு?

### ஆய்வில் வெளியான சுவாரஸ்ய தகவல்கள்

**சென்னை, டிச.15–**

இன்றைய இளைஞர்கள் எந்த விஷயங்களுக்கு அதிகமான அளவில் செலவு செய்கிறார்கள் என்பது குறித்த முக்கியமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இளைஞர்கள் என்றாலே தேவையில்லாத விஷயங்களைப்பணத்தை அதிகம் செலவு செய்வார்கள் என்ற கருத்து உள்ளது. ஆனால் இன்றைய இளைஞர்கள் தங்கள் பணத்தை செலவழிக்கும் விதத்தை மாற்றியுள்ளனர். super money நிறுவனம் நடத்திய ஒரு புதிய அறிக்கை இதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்தஅறிக்கை, இன்றைய ஜென் இசட் தலைமுறை எப்படி பணத்தை நிர்வகிக்கிறது என்பதைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. கடந்த ஒரு வருடத்தில் நடந்த லட்சக்கணக்கான UPI பரிவர்த்தனைகளைவைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. டிஜிட்டல் பேமெண்ட்கள், சிறிய அளவிலான செலவுகள் மற்றும் கடன் செயலி ஆகியவை இன்றைய இளைஞர்களின் நிதி வாழ்க்கையை எப்படி வடிவமைக்கின்றன என்பதை இந்த ஆய்வறிக்கை காட்டுகிறது.

சூப்பர் மணி தளத்தைப் பயன்படுத்தும் பயனர்களில் கிட்டத்தட்ட 72சதவீதம் பேர் 30 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். எனவே, இந்த ஆய்வின் முடிவுகள், பெரிய நகரங்கள் மற்றும் சிறிய நகரங்களில் உள்ள இளைஞர்களின் நிதிப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. இந்த ஆய்வின்படி, இளைஞர்களுக்கு டிஜிட்டல் பேமெண்ட்கள் மிகவும் சாதாரணமாகிவிட்டன. இந்த அறிக்கையின்படி, 74 சதவீதம் இளைஞர்கள் மாதம் 50க்கும் மேற்பட்ட டிஜிட்டல் பேமெண்ட்களைச் செய்கிறார்கள். பலர் மாதம் 200க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளைச் செய்கிறார்கள்.

ஸ்நாக்ஸ் வாங்கினாலும், கேப் புக் செய்தாலும், அல்லது நண்பர்களுடன் பில் செலவுகளைப் பகிர்ந்து கொண்டாலும்,கியூ ஆர் கோட்களை ஸ்கேன் செய்வது அவர்களுக்கு ஒரு பழக்கமாகி விட்டது. இந்த ஆய்வில் மிகவும் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால், குறைந்த மதிப்புள்ள செலவுகள்தான் அதிகம் நடக்கின்றன.

கிட்டத்தட்ட 76 சதவீதம் பரிவர்த்தனைகள் 200 ரூபாய்க்குக் கீழே நடக்கின்றன. இது பெரும்பாலும் சிறிய இனிப்புகள், மளிகைப் பொருட்கள் மற்றும் அன்றாடத் தேவைகளுக்காகச் செய்யப்படுகிறது. இந்தச் சிறிய செலவுகள்தான், பெரிய அளவிலான வாங்குதல்களை விட இன்றைய இளைஞர்களின் நிதி வாழ்க்கையை அதிகமாக வடிவமைக்கின்றன.

இந்த அறிக்கை நாள் முழுவதும் நடக்கும் பழக்கவழக்கங்களையும் காட்டுகிறது. நள்ளிரவு முதல் காலை 6 மணி வரை உணவு ஆர்டர்கள் அதிகமாக நடக்கின்றன. காலை 6 மணி முதல் 11 மணி வரை, மளிகை மற்றும் சூப்பர் மார்க்கெட் பொருட்களைவாங்குவது அதிகமாக நடக்கின்றன. இது குறிப்பாகப் பெரிய நகரங்களில், அன்றைய நாளைத் திட்டமிட்டுத் தொடங்குவதைக் காட்டுகிறது. பெரிய நகரங்களில், காலை 6 மணி முதல் 11 மணி வரைதான் அதிக எண்ணிக்கையிலான பரிவர்த்தனைகள் நடக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் மளிகைப் பொருட்கள் வாங்குவதுதான். இது திட்டமிட்டு வாங்குவதையும், அருகிலுள்ள கடைகளுக்குச் சென்று விரைவாகப் பொருட்களை வாங்குவதையும் டிஜிட்டல் வசதிகளை விரும்புவதையும் காட்டுகிறது.இந்த ஆய்வு, இளைஞர்கள் கடன் வாங்குவதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதிலும் ஒரு கவனமான மாற்றத்தைக் காட்டுகிறது. சுமார் 45 சதவீதம் பயனர்கள்கடனைப் பயன்படுத்துவதில் புதியவர்களாக இருக்கின்றனர். ஆனாலும், பலர் பாதுகாப்பான கார்டுகளை விரும்புகிறார்கள். இது கடன் உலகில் மிகவும் விழிப்புணர்வுடனும், கவனத்துடனும் ஒழுக்கத்துடனும் நுழைவதைக் குறிக்கிறது. இது கட்டுப்படுத்த முடியாத கடனில் சிக்காமல் நிதி ஆரோக்கியத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. இது போன்ற பல அம்சங்கள் இந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

### 1 லட்சம் வழக்குகளுக்கு ஒரே நாளில் தீர்வு

## தமிழகம் முழுவதும் லோக்அதாலத்தில் ரூ.858 கோடி இழப்பீடு

**சென்னை, டிச. 15–**

தமிழகம் முழுவதும் நேற்று நடைபெற்ற தேசிய லோக் அதாலத்தில் 1 லட்சத்து 3,884 நிலுவை வழக்குகளுக்கு ஒரேநாளில்தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குரூ.857.77 கோடி இழப்பீட்டுத் தொகைக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய லோக்அதாலத் தமிழகம் முழுவதும் நேற்று நடைபெற்றது. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரும், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுமான எம்.எம்.ஸ்ரீவஸ்தவா அறிவுறுத்தல்படி வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அதன்படி சென்னைஉயர்நீதிமன்றத்தில் நீதிபதி பி.பி. பாலாஜி மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் டி.என். வள்ளிநாயகம், ஏ.ராமமூர்த்தி, எஸ்.கே. கிருஷ்ணன், எம்.ஜெயபால், பி.கோகுல்தாஸ் ஆகியோர் தலைமையிலும், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதி ஆர். கலைமதி மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள்ஜி. சொக்கலிங்கம், ஆர்.தாரணி ஆகியோர் தலைமையிலும் நிலுவை வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

இதேபோல மாவட்ட மற்றும் தாலுகா அளவில் மொத்தம் 516 அமர்வுகள் ஏற்படுத்தப்பட்டு 1 லட்சத்து 3,884 நிலுவை வழக்குகளுக்கு நேற்று ஒரே நாளில் தீர்வு காணப்பட்டன. இதன்மூலம் மொத்தம் ரூ. 857.77 கோடிக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டு தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. மதுரை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உயர் நீதிமன்ற மூத்த நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் மேற்பார்வையிட்டார். தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.டி ஜெகதீஷ் சந்திராவும், திண்டுக்கல்லில் நீதிபதி எம். தண்டபாணியும், புதுக்கோட்டையில் நீதிபதி என். செந்தில்குமாரும் பார்வையிட்டு காசோலைகளை வழங்கினர்.

இதேபோல சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்ற லோக்அதாலத்தில் முதன்மை அமர்வு நீதிபதி எஸ்.கார்த்திகேயன் உள்ளிட்ட கீழமை நீதிமன்ற நீதிபதிகள் பங்கேற்றனர்.

மாநிலம் முழுவதும் நடைபெற்றஇந்த லோக்அதாலத் ஏற்பாடுகளை மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலரும், மாவட்ட நீதிபதியுமான எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் அந்தந்த மாவட்டநீதிபதிகள் செய்திருந்தனர்.

### திருசெங்கோட்டில்

# த.வெ.க. வேட்பாளர்கள் அறிமுகம் தொடக்கம்

### செங்கோட்டையன் தலைமையில் நடந்தது

**சென்னை, டிச. 15–**

சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் தவெக வேட்பாளர்கள் இன்று முதல் அறிமுகம் செய்யப்பட வாய்ப்பு என தகவல் வெளியாகி உள்ளது. கடந்த சில மாதங்களாக வேட்பாளர்கள் தேர்வு நடைபெற்ற நிலையில், இன்று சில தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிமுகம் செய்யப்பட வாய்ப்பு உள்ளது. திருசெங்கோட்டில் புஸ்சி ஆனந்த், செங்கோட்டையன் பங்கேற்கும் நிகழ்ச்சியில் வேட்பாளர்கள் அறிமுகம் செய்யப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தின் முன்னணி நடிகர்களில் ஒருவரான விஜய் கடந்த கடந்த 2024 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கினார். தமிழக சட்டமன்ற தேர்தல் தான் தனது கட்சியின் இலக்கு என்று அறிவித்த விஜய், ஜனநாயகன் படப்பிடிப்பு முடிந்ததில் இருந்து அரசியல் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார். சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது.

இதனால், பிரசாரம் உள்ளிட்ட பணிகளில் விஜய் தீவிரமாக ஈடுபட்டு உள்ளார். தனது தலைமையை ஏற்று வரும் கட்சிகளுடன் கூட்டணி என அறிவித்துள்ள விஜய், அடுத்த கட்டமாக வரும் ஈரோட்டில் இருந்து தனது பிரசாரத்தை தொடங்க உள்ளார்.

இந்த நிலையில்தான் தமிழக வெற்றிக்கழகம் இன்று முதல் தனது வேட்பாளர்களை அறிவிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பிட்ட சில தொகுதிகளுக்கு இன்று முதல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட உள்ளனர். தொகுதி நிர்வாகிகளுக்கு மட்டும் அறிவிக்க விஜய் திட்டமிட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

வேட்பாளர் இவர்தான் எனகட்சியினருக்குஅடையாளம் காட்டினால், வீதி வீதியாக பிரசாரம் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் , வாக்களர்கள் மத்தியில் நல்ல அறிமுகம் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் என்பதை மனதில் வைத்து விஜய் இந்த முடிவு எடுத்ததாக சொல்லப்படுகிறது.

மற்ற கட்சிகள் விருப்ப மனு பெற தொடங்க உள்ள நிலையில், விஜய் கட்சியில் வேட்பாளர்களைசில தொகுதிகளுக்கு இன்றே அறிமுகம் செய்ய இருப்பதாக வெளியாகியிருக்கும் தகவல் தவெகவினரை உற்சாகப்படுத்தியது.

முதல் கட்டமாக திருசெங்கோட்டில் புஸ்சி ஆனந்த், செங்கோட்டையன், அருண் ராஜ் ஆகியோர் இன்று தவெக நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள். இந்த நிகழ்ச்சியில் அங்கு போட்டியிடும் வேட்பாளர் அறிமுகம் செய்யப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

234 தொகுதிகளுக்கும் உத்தேசபட்டியலைவிஜய் தயார் செய்து வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது. தொகுதிக்கு 4 பேர் வீதம் விஜய் தேர்வு செய்து வைத்துள்ளாரம்.

அதில் 60 சதவீதம் மாவட்ட செயலாளர்கள், பெண்களுக்கும், 40 சதவீதம் பிரபலங்கள், மாநில நிர்வாகிகளுக்கும் ஒதுக்கீடு செய்ய தவெக முடிவு செய்துள்ளது. சென்னை, திருச்சி, நெல்லை, ஆலங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் அப்பகுதியில் பிரபலமாக இருக்க கூடிய தியேட்டர் உரிமையாளர்கள் தவெக சார்பில் போட்டியிட இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

### ஊட்டியில்

## ஜீரோ டிகிரி செல்சியஸாக வெப்பநிலை பதிவு

### பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**ஊட்டி,டிச.15–**

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பனிக்காலம் என்பதால் நீர் பனி மற்றும் உறைபனி காணப்படும். நீர் பனி தொடங்கிய அடுத்த ஒருசில வாரங்களில் உறை பனி தொடங்கும். கடந்த நவம்பர் மாதமே நீர் பனிதொடங்கிய நிலையில், பல்வேறு புயல்களால் தமிழகம் மற்றும் நீலகிரியில் மழை பாதிப்பு இருந்ததால் உறை பனி தள்ளிப்போனது. அதேபோல் எப்போதும் ஊட்டியில்தான் உறை பனி தொடங்கும்.



ஆனால் இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக ஊட்டியை அடுத்த மஞ்சூர் மற்றும் குன்னூர் பகுதிகளில் கடந்த வாரம் உறை பனிப்பொழிவு தொடங்கியது.

இந்நிலையில், ஊட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில்ஒருசில இடங்களில் நேற்று முன்தினம் உறை பனிப்பொழிவு தொடங்கியது. தாமதமாக தொடங்கினாலும் கடும் குளிர் நிலவியது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. இந்நிலையில்இரண்டாவதுநாளான நேற்று ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா பகுதியில் 2 டிகிரி செல்சியஸ் ஆகவும், ஊட்டி காந்தல் மற்றும் தலைக்குந்தா பகுதியில் ஜீரோ டிகிரி செல்சியஸ் ஆகவும், மஞ்சூர் அடுத்த அவலாஞ்சி பகுதியில் மைனஸ் 1 டிகிரி செல்சியஸ் ஆகவும் வெப்பநிலை பதிவானது. இதன் காரணமாக ஊட்டி நகரில் குதிரை பந்தயமைதானம், காந்தல், தலைக்குந்தா உள்ளிட்ட பகுதிகளில் கடும் உறை பனி நிலவியது.

தலைக்குந்தா பகுதியில் காணப்பட்ட உறை பனியால் பல்வேறு பகுதிகள் காஷ்மீர்போல் காட்சியளித்தன. பச்சைபுல்மைதானங்களில் வெள்ளைக் கம்பளம் போர்த்தியதுபோல் காணப்பட்ட உறை பனி ரம்மியமாக காட்சியளித்தது.

இதற்காக அதிகாலை நேரத்தில் ஆர்வமுடன் வந்திருந்த சுற்றுலா பயணிகள் வெள்ளைக் கம்பளம் போல் படர்ந்திருந்த உறை பனியை பார்த்த சுற்றுலா பயணிகள் ஆர்வத்தோடு செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

அதேபோல் கார்கள் மீது விழுந்திருந்த உறை பனி வெள்ளைப் பஞ்சுகள் பதித்ததுபோல் காணப்பட்டது. இருசக்கர வாகன இருக்கைகள் மீதும் உறை பனி காணப்பட்டது. குளிர் பாதிப்பை சமாளிக்க ஒரு சிலர் நெருப்பு மூட்டி அதிகாலை நேரத்தில் குளிர்காய்ந்து வருகின்றனர். ஒருசிலர்கம்பளி ஆடைகளைப் பயன்படுத்தி சமாளிக்கின்றனர்.

இது குறித்து உள்ளூர்வாசிகள் கூறும்போது, ‘‘ஊட்டி தலைக்குந்தா பகுதியில் உறை பனி பொழிவின் தொடக்கத்திலேயே இந்த முறை வழக்கத்தைவிட மிக அதிகமாகக் காணப்படுவதால் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அதிகாலை நேரத்தில் வேலைக்குச் செல்ல முடியாமல் கடும் குளிர் இருப்பதால், காலை 10 மணிக்கு மேல் உறை பனியின் தாக்கம் குறைந்தவுடன்தான் பணிகளை தொடர முடிகிறது.

இருந்தாலும் கேரட் அறுவடை உள்ளிட்ட பணிகளுக்கு செல்லும் தொழிலாளர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். தாமதமாக தொடங்கியதால் இந்த ஆண்டு உறை பனி தாக்கம் அதிகமாக இருக்கும், அடுத்த ஒருசில வாரங்களில் தேயிலைச் செடிகள் கருகிவிடும்’’ என்றனர்.

## நீதிபதி நிஷாபானு கேரள உயர் நீதிமன்றத்தில் டிச.20–க்குள் பணியில் சேர குடியரசுத் தலைவர் கெடு விதிப்பு

**சென்னை,டிச.15**

‘நீண்ட விடுப்பில் உள்ள நீதிபதி ஜெ.நிஷாபானு, டிச.20ம் தேதிக்குள் கேரள உயர் நீதிமன்றத்தில் பணியில் சேர வேண்டும்’ என்று குடியரசுத் தலைவர் கெடு விதித்து உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மூன்றாவது இடத்தில் பதவி வகித்து வந்த மூத்த நீதிபதி ஜெ.நிஷாபானுவை, கேரள உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல்செய்ய உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த ஆகஸ்ட் மாதம் மத்திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரை செய்தது.

அதையேற்ற குடியரசுத் தலைவர்திரவுபதி முர்மு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெ.நிஷா பானுவை, கேரள உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்து

கடந்த அக்.13ல் உத்தரவிட்டார். ஆனால் நீதிபதி ஜெ.நிஷாபானு, கேரள உயர் நீதிமன்றத்துக்கு சென்று பதவியேற்காமல் அக்.14 முதல் தனது உடல்நிலையைக் காரணம் காட்டி நீண்ட விடுப்பில் உள்ளதாகக் கூறப்படு கிறது. இவ்வாறு காலம் தாழ்த்தி வருவது உச்ச நீதிமன்ற கொலீஜியம், நீதித்துறை கட்டமைப்பு மற்றும் மாண்பை அவமதிக்கும் செயல் எனக் கூறி, சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சிலர் கூட்டாக இது தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பினர்.

அதேபோல, சென்னை உயர் நீதிமன்றத்தில் மூன்றாவது இடத்தில் உள்ள நீதிபதி நிஷாபானுவை வேண்டுமென்றே கேரள உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்து அவரை 9வது இடத்துக்கு தள்ளியுள்ளதாக உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர்கள் சங்கமும் குற்றம் சாட்டியது. இதற்கிடையே நீதிபதி நிஷாபானு இடம்பெறாத சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நீதிபதிகள் இருவர் அடங்கிய கொலீஜியம், உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை நிரப்பும் வகையில் மாநில அரசுக்கு பரிந்துரைகள் அனுப்பப்பட்டதாகவும், அப்போது நீதிபதி நிஷாபானு விவகாரத்தைச் சுட்டிக்காட்டி தமிழக அரசு ஏற்க மறுத்து திருப்பி அனுப்பியதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் ஆலோசனை நடத்தியபிறகு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து கேரள உயர் நீதிமன்ற த்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதி ஜெ.நிஷாபானு, டிச.20ம் தேதிக்குள் கேரள உயர் நீதிமன்றத்துக்கு சென்று பதவியேற்க வேண்டும். இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி பணியிட மாற்றம் செய்யப்பட்டாலே அவரது பழைய பணியிடம் காலி ஆகிவிட்டதாக கருதப்படும் என மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வாலும் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்துள்ளார். இதனால் நீதிபதி நிஷாபானு டிச.20க்குள் கேரள உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக பதவியேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

# கேரள உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி

## ஆளுங்கட்சியான மார்க்சிஸ்ட்டுக்கு கடும் பின்னடைவு

**திருவனந்தபுரம், டிச.14–**

கேரளாவில் 6 மாநகராட்சிகள், 87 நகராட்சிகள், 941 கிராம ஊராட்சிகள், 152 ஊராட்சி ஒன்றியங்கள், 14 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. அந்த மாநிலத்தில் ஒட்டுமொத்தமாக 1,200 உள்ளாட்சி அமைப்புகளும், அவற்றில் 23,612 வார்டுகளும் உள்ளன. இதில் 1,199 உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 9, 10 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது.



நேற்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஆரம்பம் முதலே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி(யுடிஎஃப்) அதிக உள்ளாட்சி அமைப்புகளில் முன்னிலையில் இருந்தது. ஆளும் மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணிக்கு (எல்டிஎஃப்) பெரும் பின்னடைவு ஏற்பட்டது. 3 மாநகராட்சிகளில் காங்கிரஸ் வெற்றி: கேரளாவில் திருவனந்தபுரம், கொல்லம், கொச்சி, திருச்சூர், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய 6 மாநகராட்சிகள் உள்ளன. இதில் கொச்சி, திருச்சூர், கண்ணூர் மாநகராட்சிகள் காங்கிரஸ் கூட்டணி வசமாகியுள்ளன. திருவனந்தபுரம் மாநகராட்சியை பாஜக கூட்டணி முதல் முறையாக கைப்பற்றியுள்ளது.

14 மாவட்ட ஊராட்சிகளில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கூட்டணிகள் தலா 7 மாவட்ட ஊராட்சிகளை கைப்பற்றியுள்ளன. 86 நகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 54, மார்க்சிஸ்ட் கூட்டணி 28 நகராட்சிகளை கைப்பற்றின. 152 ஊராட்சி ஒன்றியங்களில் காங்கிரஸ் கூட்டணி 79, மார்க்சிஸ்ட் கூட்டணி 63ஐ பெற்றுள்ளன.

மொத்தம் உள்ள 941 ஊராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 504, மார்க்சிஸ்ட் கூட்டணி 341 ஊராட்சிகளில் வெற்றி பெற்றன. திருவனந்தபுரம் மாநகராட்சியை கைப்பற்றியதோடு, இதரமாநகராட்சிகளிலும் குறிப்பிடத்தக்க வார்டுகளை பாஜக பெற்றுள்ளது'' என்று தெரிவித்தனர்.

திருவனந்தபுரம் மாநகராட்சி கடந்த 45 ஆண்டுகளாக மார்க்சிஸ்ட் கூட்டணியின் கோட்டையாக இருந்தது. முதல்முறையாக இந்த மாநகராட்சியை பாஜக கைப்பற்றி புதிய வரலாறு படைத்துள்ளது. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

### டெல்லியில் நயினார் நாகேந்திரன் முகாம்

# தொகுதி பங்கீடு குறித்து பா.ஜ.க. தலைவர்களுடன் சந்திப்பு

## அதிக இடங்களை அ.தி.மு.க.விடம் பெற வலியுறுத்தல்

**புதுடெல்லி, டிச.15**

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தற்போது டெல்லியில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து பேசி உள்ளார். மேலும் அமித் ஷா மற்றும் ஜே.பி. நட்டாவையும் இன்று சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் அடுத்த சட்டமன்றத்தேர்தல்நெருங்கி வரும் நிலையில், பாஜக தனது கட்சியை பலப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, அமித்ஷாவுடன் நடைபெறக்கூடிய சந்திப்பில், கூட்டணியின் வலிமை, தேர்தல் களத்தில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், திமுகவை எதிர்க்கும் ஒருங்கிணைந்த வியூகம் போன்றவை விவாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

இந்த டெல்லி பயணத்திற்கு முன்பாக, அதிமுக பொதுச்செயலாளர் மற்றும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியை நயினார் நாகேந்திரன் சந்தித்து ஆலோசனை நடத்தியிருந்தது குறிப்பிட த்தக்கது. இந்த ஆலோசனைகளுக்குப் பிறகே நயினார் நாகேந்திரன் டெல்லி சென்றுள்ளார் என்பதால், மத்திய தலைமைக்கு தமிழக அரசியல் நிலவரம் குறித்து விரிவாக விளக்குவதற்காகவே இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.தமிழகத்தில் பாஜக அமைப்பை மாவட்ட அளவில் வலுப்படுத்துவது, புதிய நிர்வாகிகளை நியமிப்பது, கூட்டணி கட்சிகளுடன் ஒருங்கிணைந்து தேர்தலை சந்திப்பது போன்ற அம்சங்களும் இந்த சந்திப்புகளில் விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லி மட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்பதால், தமிழக அரசியல் சூழல் மேலும் பரபரப்பாகியுள்ளது.

இதற்கிடையே, 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், சமீபத்தில் சென்னையில் வானகரத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்குழு கூட்டமும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றது. அந்த கூட்டத்தில், கூட்டணி ஆட்சியில் பங்கு குறித்து பல்வேறு கருத்துகள் முன்வை க்கப்பட்டதுடன், கூட்டணியைத் தவிர ஆட்சியில் மற்றவர்களுக்கு பங்கு கிடையாது என்ற கருத்தும் வெளிப்படையாக பேசப்பட்டது. இது கூட்டணி அரசியலில் புதிய சமன்பாடுகள் உருவாகலாம் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில், டெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நயினார் நாகேந்திரன் சந்தித்தது கூடுதல் கவனம் பெற்றுள்ளது. அந்த சந்திப்பின் போது, கடந்த 32 நாட்களில் நடைபெற்ற "தமிழகம் தலைநிமிரத் தமிழனின் பயணம்" யாத்திரையின்போது மக்களிடமிருந்து பெறப்பட்ட, நிதிஅமைச்சகத்தைசார்ந்த கோரிக்கைகள் மற்றும் மனுக்களை, அவர் நிர்மலாசீதாராமனிடம்வழங்கினார். பொதுமக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் மத்திய அரசின்கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக பாஜக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் தங்களுக்கு வெற்றி வாய்ப்பு உள்ள 50 தொகுதிகளின் பட்டியலை அவர் பாஜக தலைவர்களிடம் சமர்ப்பித்துள்ளார் எனவே அதிமுகவிடம் இந்த முறை கூடுதல் தொகுதிகள் கேட்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.இந்த சந்திப்புகளுக்குப் பிறகு, தமிழக அரசியல் களத்தில் முக்கிய அறிவிப்புகள் அல்லது முடிவுகள் வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# புதிய தலைமை தகவல் ஆணையராக ராஜ்குமார் கோயல் இன்று பதவியேற்பு

**புதுடெல்லி, டிச.15–**

புதிய தலைமை தகவல் ஆணையராக ராஜ் குமார் கோயல் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் நாளை பதவியேற்க உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.



மத்திய அரசின் தலைமைத் தகவல் ஆணையராக (சிஐசி) இருந்த ஹிராலால் சமாரியா, கடந்த செப்டம்பர் 13ம் தேதி ஓய்வு பெற்றார். அந்தப் பதவி காலியாக உள்ளது. மேலும், 10ல் 8 தகவல் ஆணையர்கள் பதவி கடந்த 2023ம் ஆண்டு முதல் காலியாக உள்ளது. ஆனந்தி ராமலிங்கம், வினோத் குமார் திவாரி ஆகிய தகவல் ஆணையர்களுடன் மத்திய தகவல் ஆணையம் இயங்கி வருகிறது.

இதையடுத்து பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான 3 உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழு கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமரின் அறையில் கடந்த 11ம் தேதி நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், மத்திய அரசின் தலைமை தகவல் ஆணையர், 8 தகவல் ஆணையர்களை தேர்வு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இது மட்டுமின்றி மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்துக்கு புதிய தலைவரைத் தேர்வு செய்வது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது.

அப்போது இந்தப் பதவிகளுக்கு பிரதமர் மோடி தலைமையிலான அரசு சிலரது பெயர்களை பரிந்துரை செய்ததாகவும், அதற்கு ராகுல் காந்தி எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தகவல் வெளியானது.

இந்த சூழ்நிலையில், மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை முன்னாள் செயலாளர் ராஜ் குமார் கோயல் தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இது போல, ரயில்வே வாரிய முன்னாள் தலைவர் ஜெயா வர்மா சின்ஹா மற்றும் சட்ட நிபுணரும் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் உறுப்பினருமான சுதா ராணி ரெலங்கி ஆகிய 2 பெண்கள் உட்பட 8 தகவல் ஆணையர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இது

தவிர, இந்திய வனத் துறை முன்னாள் அதிகாரி குஷ்வந்த் சிங் சேத்தி, முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி ஸ்வாகத் தாஸ், மூத்த பத்திரிகையாளர் பி.ஆர். ரமேஷ், சமூக நீதித் துறை முன்னாள் செயலாளர் சுரேந்திர சிங் மீனா, அஷுடோஷ் சதுர்வேதி மற்றும் சஞ்சீவ் குமார் ஜிண்டால் ஆகிய 6 பேர் புதிய தகவல் ஆணையர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் வரும் நாளை பதவியேற்றுக் கொள்வார்கள் எனதகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கெனவே ஒரு பெண் (ஆனந்தி ராமலிங்கம்) இப்பதவியில் இருப்பதால் பெண்கள் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது. இதுபோல, கடந்த 7 ஆண்டுகளில் முதல் முறையாக இப்போதுதான் மத்திய தகவல் ஆணையம் முழு உறுப்பினர்களைக் கொண்டதாக (10) செயல்பட உள்ளது.

### பாஜக தலைமையை சந்திக்க

# 10 மணிப்பூர் எம்.எல்.ஏ.க்கள் திடீர் டெல்லி பயணம்

**இம்பால், டிச. 15**

மணிப்பூர் முன்னாள் முதல்வர்பிரேன்சிங், பேரவைத் தலைவர் சத்யபிரத சிங் உள்பட 10 எம்எல்ஏக்கள் பாஜக தலைமையை சந்திக்க சனிக்கிழமை டெல்லி விரைந்தனர்.

இவர்கள் பாஜக தலைமையுடன் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

மணிப்பூரில் குகிமைதேயி சமூகத்தினர் இடையே 2023, மே மாதம் முதல் மோதல் நிலவி வரும் நிலையில் முதல்வர் பதவியை பிரேன் சிங் கடந்த பிப்ரவரி மாதம் ராஜிநாமா செய்தார். அதன்பிறகு அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது.

தில்லி செல்வது குறித்து பிரேன் சிங் கூறுகையில், 'மணிப்பூர் விவகாரத்தில் நல்ல முடிவு மேற்கொள்ளப்படும் என நம்புகிறேன். பாஜக மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நிறைவடைந்த பிறகே புதிய அரசாங்கம் அமைப்பது குறித்து தெரியவரும்' என்றார்.இதுகுறித்து எம்எல்ஏ ஜய்கிஷன் சிங் கூறுகையில், இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க கட்சித் தலைமையிடம் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

60 உறுப்பினர்களைக் கொண்ட மணிப்பூர் பேரவையில் பாஜக வுக்கு 37 எம்எல்ஏக்கள் உள்ளனர்.

### மதுபோதையில்

# அறுவை சிகிச்சை செய்த போலி மருத்துவர்

## இளம்பெண் உயிரிழப்பு

**லக்னோ, டிச. 15**

மதுபோதையில் போலி மருத்துவர் அறுவைசிகிச்சை செய்ததில் இளம் பெண் உயிரிழந்தார்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் பாராபங்கியை சேர்ந்தவர் முனிஷ்ரா ராவத் (25). இவர் கடந்த டிசம்பர் 6 அன்று உடல்நலக் கோளாறால் மரணமடைந்தார். இது குறித்து காவல் நிலயத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் காவலர்கள் விசாரணையைத் தொடங்கினர். அந்த விசாரணையில் கிடைத்த தகவல்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்புத்தியுள்ளது.

முனிஷ்ரா ராவத் தீராத வயிற்று வலியால் துடித்து வந்துள்ளார். இதன் காரணமாக அவரது கணவர் தெபகதூர் ராவத், கோத்தியில் உள்ள ஸ்ரீ தாமோதர் ஆஸ்தலயா என்ற கிளினிக்கில் அவரது மனைவியை சேர்த்துள்ளார்.

அங்கு அவரை சோதித்த மருத்துவர், அப்பெண்ணின் கிட்னியில் கல் இருப்பதாகவும், அக்கல்லை அறுவை சிகிச்சை மூலமாக நீக்க வேண்டும் என்பதால் ரூபாய் 25000 செலவாகும் என்றும் கூறியுள்ளார். எனவே முன்பணமாக ரூபாய் 20 ஆயிரத்தை ராவத் காட்டினார். இதனை தொடர்ந்து அப்பெண்ணிற்கு மருத்துவர் அறுவை சிகிச்சை செய்த அடுத்த நாளே அப்பெண் இறந்துவிட்டார். மேலும் விசாரணையில் அதிர்ச்சி தரும்விதமாக பல தகவல்களும் கிடைத்துள்ளன. அதாவது அறுவை சிகிச்சையின் போது மருத்துவர் மது போதையில் இருந்துள்ளார் என்றும் அதோடு மட்டுமல்லாமல் சமூக வலைதளத்தில் வீடியோவை பார்த்து அறுவை சிகிச்சை செய்ததாகவும் கூறப்படுகிறது.இந்த நிலையில் அப்பெண்ணின் வயிற்றில் பல ஆழமான கீறல்களும் ஏற்பட்டதன் காரணமாக அவர் உயிரிழந்ததாககூறப்படுகிறது. பின்னர் விசாரணையில் அவர் போலி மருத்துவர் என்றும்

அந்த கிளினிக் பல ஆண்டுகளாக நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தின் மீதான அதிகாரிகளின் நடவடிக்கையினால் அந்த கிளினிக்கு சீல் வைக்கப்பட்டது. போலி மருத்துவர் மது போதையில் வீடியோவை பார்த்து அறுவை சிகிச்சை செய்த சம்பவம் அம்மாநிலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# "புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வாங்கித் தருவதே தி.மு.க.வின் முதல் கொள்கை"

## ஜெகத்ரட்சகன் எம்.பி. உறுதி

**புதுச்சேரி,டிச.15–**

"புதுச்சேரியில் முதல்வர், எம்எல்ஏக்களுக்கு அதிகாரம் இல்லை. எங்கோ இருப்பவரை துணைநிலை ஆளுநராக அமர வைத்து அதிகாரத்தை தருகிறார்கள்" என ஜெகத்ரட்சகன் எம்.பி விமர்சனம் செய்துள்ளார். மேலும், "புதுச்சேரிக்கு தனி மாநில அந்தஸ்தை வாங்கி தருவதுதான் திமுகவின் முதல் கொள்கை" என்று அவர் கூறினார்.

புதுச்சேரி மாநிலத்தில் தொகுதி வாரியாக திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில திமுக வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி கூட்டம் கம்பன்கலையரங்கத்தில் இன்று நடைபெற்றது.

திமுக அமைப்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான சிவா தலைமை தாங்கினார். அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார், எம்எல்ஏக்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயிற்சி கூட்டத்தை திமுக கொள்கைபரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்பி தொடங்கி வைத்தார். தமிழக தொழில் துறை அமைச்சரும், திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளருமான டி.ஆர்.பி.ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த பயிற்சி கூட்டத்தை தலைமையால் அனுப்பப்பட்ட நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியினர் காணொலி வாயிலாக பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி கூட்டத்தில் புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுதிகளை சேர்ந்த தொகுதி செயலாளர்கள் மற்றும் திமுக வாக்குச்சாவடி முகவர்கள் 800 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.இதில் ஜெகத்ரட்சகன் எம்.பி பேசியது: "புதுச்சேரியில் 30 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற வேண்டும். அதற்கு அனைவரும் இப்போதிலிருந்தே உழைக்க வேண்டும். தமிழகத்தில் திமுக தலைவர் பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார். உலகத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் இந்தியா வருகின்றனர். தொழில் தொடங்க தமிழகம் தான் வருகை தருகின்றனர்.

1954க்கு முன்பு புதுச்சேரி ஒரு மாநிலம் அல்ல, நாடாக இருந்தது. அந்த நாடு தொடர்ந்திருந்தால் தமிழகத்தில் திராவிட நாடு, இங்குபுதுச்சேரியில் ஒரு நாடு என இருந்திருக்கும். இங்கு செம்மைப்படுத்த ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இங்கு முதல்வர் நாற்காலி உடைந்துவிட்டால் கூட அதனை சரிசெய்ய டெல்லி செல்ல வேண்டும்.

மக்கள் தங்களை தாங்களே ஆண்டுகொள்ளும் ஆட்சி என்று சொல்கிறீர்களே, இதுஜனநாயகமா? புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்தை கூட பெற முடியவில்லை. எங்கோ உள்ள கோவா மாநிலமாக இருக்கிறது. புதுச்சேரி சுற்றுலா தலமாக இருக்கிறது. இங்குள்ள விமான நிலையத்தை பெரிதாக்கலாம்.3 பஞ்சாலைகளை திறக்க வாய்ப்பில்லை. இதற்கெல்லாம் மாநில அந்தஸ்து பெற வேண்டும். அதனை பெறுவது திமுக ஆட்சியால் தான் முடியும். நான்கரை ஆண்டு காலமாக தமிழகத்துக்கு மத்திய அரசிடம் இருந்து எந்தவொரு நிதியும் கிடைக்கவில்லை. ஆனாலும் திமுக தலைவர் நீதிமன்றத்தை நாடினார்.

நீதிமன்றம் மூலம் எல்லா வாய்ப்பையும் உருவாக்கி தந்து கொண்டிருக்கின்றார். அதே போன்று புதுச்சேரிக்கு மாநிலஅந்தஸ்துவேண்டி நாமும் நீதிமன்றத்தை நாட இருக்கின்றோம்.

புதுச்சேரிக்கு தனி மாநில அந்தஸ்தை வாங்கி தருவதுதான் திமுகவின் முதல் கொள்கை. தமிழகத்தில் 69 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இங்கு 50 சதவீதம்தான். எங்கோ இருப்பவர்கள் எல்லாம் இங்கு வேலை செய்கின்றனர். ஒருவருக்கு கூட தமிழும், இந்த மண் வாசனையும் தெரியவில்லை. இந்த மண்ணைப் பற்றியும், மக்களை பற்றியும் அவர்களுக்கு புரியவில்லை.

இங்கு முதல்வராக, எம்எல்ஏவாக இருந்தாலும் யாருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. எங்கோ இருப்பவரை துணை நிலை ஆளுநராக அமர வைத்து பல்வேறு அதிகாரத்தை அவருக்கு தருகிறார்கள். தமிழகத்தில் புயல் நிவாரணம் ரூ.6,000 கோடி கேட்டோம். ஆனால் ரூ.60கோடிதான்கொடுத்தார்கள்.

புதுச்சேரிக்கு ரூ.1,200 கோடி கேட்டோம், ரூ.62 கோடி தான் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட அவல நிலைகளை மாற்ற, புதுச்சேரி மக்களின் நலனை பாதுகாக்க இந்த தேர்தல் களத்தை நாம் பயன்படுத்தியாக வேண்டும். திமுகவின் கோட்டை என்றுமே புதுச்சேரி தான்" என்று ஜெகத்ரட்சகன் பேசினார்.

### ஜனவரி 6–ஆம் தேதி

# டி.கே. சிவக்குமார் கர்நாடக முதல்வராகிறார்?

## எம்.எல்.ஏ. தகவல்

**பெங்களூரு, டிச. 15**

டி.கே. சிவக் குமார் ஜனவரி 6–ஆம் தேதி கர்நாடக முதல்வராகிறார் என எம்.எல்.ஏ. ஒருவர் தெரிவித்தார்.



கர்நாடக துணை முதல்வர் டிகே சிவகுமார் ஜனவரி 6 அன்று அம்மாநில முதல்வராகப் பதவியேற்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் எம்எல்ஏ இக்பால் ஹூசைன் செய்தியாளர்களிடம் கூறுகையில், டிகே சிவகுமார் முதல்வராவது 99 சதவீதம் உறுதி என்று தெரிவித்திருப்பது கவனம் பெற்றுள்ளது. கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைந்து இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. காங்கிரஸ் ஆட்சியில் முதல் இரண்டரை ஆண்டுகளுக்கு சித்தராமையா முதல்வர் பதவியில் தொடர்வார்என்றுதொடக்கத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

அடுத்த இரண்டரை ஆண்டுகள் துணை முதல்வராக உள்ள டி.கே. சிவகுமார் முதல்வர் பதவியில் தொடர்வார் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, முதல்வர் பதவியை மாற்றக்கோரி காங்கிரஸ் கட்சிக்குள் குரல்கள் எழத் தொடங்கின. இப்பிரச்சினையைத் தாங்கள் முடிவுக்குக் கொண்டு வருவோம் காங்கிரஸ் மேலிடம் நம்பிக்கை தெரிவித்தது. இதன்படி சித்தராமையா மற்றும் டிகே சிவகுமார் நேரில் சந்தித்து உணவருந்திக் கொண்டார்கள். இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களையும் சந்தித்துக் கொண்டார்கள். கட்சி மேலிடத்துக்குக் கட்டுப்படுவோம் என்பது இருவருடைய நிலைப்பாடாக உள்ளது.

இந்நிலையில், ஜனவரி 6 அன்று கர்நாடக முதல்வராக டிகே சிவகுமார் பதவியேற்பார் என எம்எல்ஏ கூறியிருப்பது பெரும் செய்தியாக மாறியுள்ளது. கர்நாடக முதல்வராக டிகே சிவகுமார் ஜனவரி 6 அன்று பதவியேற்பார் என காங்கிரஸ் எம்எல்ஏ ஹூசைன் கூறியுள்ளார். மேலும், ஜனவரி 6ஐ குறிப்பிட்டுச் சொல்வதற்கான காரணம் குறித்து கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அவர், "எனக்குத் தெரியாது. இதுவொரு பொதுவான தேதி தான். எல்லோரும் இதைத்தான் சொல்கிறார்கள். ஜனவரி 6 அல்லது ஜனவரி 9 ஆக இருக்கலாம். இதுதான் தேதிகள்" என்றார் அவர். டிகே சிவகுமாரின் தீவிர ஆதரவாளராக அறியப்பட்டுவருபவர்ஹூசைன். டிகே சிவகுமார் முதல்வராகப் பதவியேற்க வேண்டும் என இவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

# ஆஸ்திரேலியாவில் பயங்கரவாத தாக்குதல்

## 12 பேர் பலி



சிட்னி,டிச.15–

ஆஸ்திரேலியாவின் பாண்டை கடற்கரையில் யூத மதத்தினரின் 'ஹனுக்கா' எனும் பண்டிக்கை கொண்டாட்டம் நடந்த பகுதியில் புகுந்த இரு பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதில், 12 பேர் கொல்லப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவின் பிரபலமான சுற்றுலா தலம் பாண்டை கடற்கரை, அந்நாட்டின் முக்கிய நகரமான சிட்னிக்கு அருகில் உள்ளது. நேற்று விடுமுறை தினம் மற்றும் யூத மதத்தினரின் முக்கிய பண்டிகையான ஹனுக்கா எனப்படும் ஒளியை கொண்டாடும் பண்டிகையின் முதல் நாள் என்பதால், கடற்கரையில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

அப்போது, கடற்கரைக்கு கருப்பு உடையில் வந்த இரு நடுத்தர வயது நபர்கள், மிகப்பெரிய இயந்திர துப்பாக்கியை எடுத்து அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி கண்மூடித்தனமாக சுடத் துவங்கினர். துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இருபயங்கரவாதிகளும் 10 நிமிடங்களுக்கும் மேலாக 50க்கும் மேற்பட்ட முறை சுட்டனர். இதில் பொது மக்களில், 12 பேர் உயிரிழந்தனர்; 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தகவல் அறிந்து உடனடியாக அப்பகுதியை நியூ சவுத் வேல்ஸ் போலீஸ் படையினர் சுற்றி வளைத்தனர்.

போலீசார் மறைந்திருந்து பயங்கரவாதிகளை சுட முயற்சித்த நேரத்தில், பொது மக்களில் ஒருவர் துணிச்சலாக செயல்பட்டு, அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களுக்கு இடையே பதுங்கி சென்று, வெறும் கையால் பயங்கரவாதியை தாக்கி அவரது துப்பாக்கியை பிடுங்கி அடித்து விரட்டினார்.

பயங்கரவாதிகளை நோக்கி போலீசார் நடத்திய பதில் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் சுடப்பட்டு பிடிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். இருவரும் பயங்கரவாதிகள் என போலீசார் உறுதிப்படுத்தினர். எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், எதற்கு தாக்குதல் நடத்தினர் என்ற விபரங்கள் விசாரணைக்கு பின்பே தெரியவரும் என்றனர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்த பெண் ஒருவர், செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'பயங்கரவாதிகள் இருவரும் முதியவர்கள், குழந்தைகளை குறிவைத்து தாக்கினர்' என்றார்.

பாண்டை கடற்கரை துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி அல்பனீஸ் முதலில் வெளியிட்ட அறிக்கையில் 'நடந்த தாக்குதல் அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. பாதிக்கப்பட்டவர்களை எண்ணி வருந்துகிறேன்' என தெரிவித்தார்.

இதற்கு ஆஸ்திரேலிய யூத சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. 'யூத வெறுப்புதாக்குதல் குறித்து பிரதமரின் அறிக்கையில் ஒரு வார்த்தைக் கூட இல்லை' என கண்டித்தது.

இதையடுத்து சிறிது நேரத்தில் பிரதமர் அல்பனீஸ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ''இது யூத ஆஸ்திரேலியர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல். மகிழ்ச்சியும், நம்பிக்கையும் நிறைந்த நாளாக இருக்க வேண்டிய ஹனுக்கா விழாவின் முதல் நாளை, பயங்கரவாதிகள் சிதைத்துள்ளனர். நம் நாட்டில் பயங்கரவாதத்துக்கு இடமில்லை. அதை ஒழித்துக் கட்டுவோம்,'' என்றார்.

ஆஸ்திரேலியாவில் நடந்த தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலக தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டு கண்டெடுப்புசம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். அதில் ஒருவன் கொல்லப்பட்ட நிலையில், மற்றொருவன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். சம்பவ இடத்தில் இருந்த கார் ஒன்றின் அருகே ஐஇடி வகை வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை தாக்குதல் நடத்தியவர்கள் கொண்டு வந்திருக்கலாம் என போலீசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அடையாளம்

தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவன் நவீத் அக்ரம் (24) என அவனது டிரைவிங் லைசென்ஸ் மூலம் போலீசார் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர். போனிரிக் பகுதியில் உள்ள அவனது வீட்டை கண்டுபிடித்துள்ள போலீசார், அங்கு சோதனை செய்து வருகின்றனர்.

ஹமாஸ் தாக்குதலில் தப்பியவர் காயம்

கடந்த 2023 ம் ஆண்டு அக்., 7 ல் இஸ்ரேலில் ஹமாஸ் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தப்பிய ஒருவர், சிட்னியில் நடந்த தாக்குதலில் காயம் அடைந்துள்ளார்.

பெயர் வெளியாகாத நிலையில் அவர் அளித்த பேட்டியில், எனக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

ரத்தம் கசிகிறது. தாக்குதல் நடந்த போது எனது குடும்பமும் அங்கு இருந்தது. என்ன நடந்தது என தெரிவதற்குள் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்துவிட்டது. ஆஸ்திரேலியாவில் இதுபோன்று நடக்கும் என தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

பயங்கரவாதியை மடக்கிய வீராதி வீரர் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்ததும், அங்கிருந்தவர்கள் பதறியடித்து ஓட்டம் பிடித்தனர். வாகனங்கள், கட்டடங்களுக்கு பின் பதுங்கினர். இத்தகைய சூழ்நிலையில், துப்பாக்கிச்சூடு நடத்திய ஆசாமியை தேடிச் சென்று மடக்கினார் ஒருவர். துப்பாக்கி வைத்திருந்த நபரை பின்பக்கமாக சென்று கட்டிப்பிடித்து, அவனிடம் இருந்து துப்பாக்கியை பறித்தார். அவரது வேகத்தில், அந்த கொடூரன் பின்புறமாக கீழே விழுந்தான். ஆயுதம் எதுவும் இல்லாத நிலையில் அங்கிருந்து எழுந்து ஓடத் தொடங்கினான். இந்த வீடியோ காட்சி இணையத்தில் வைரலாக பரவி வருகிறது. பயங்கரவாதியை பிடித்தவரது பெயர் அஹமது எல் அஹமது, 43, என தெரியவந்துள்ளது. பழக்கடை நடத்தி வருகிறார். மற்றொரு பயங்கரவாதி சுட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மோடி கண்டனம்

இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்கள் சார்பில், உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாகவும், இந்த துயரமான தருணத்தில் ஆஸி., மக்களுடன் தான் இருப்பதாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் கண்டனம்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்ட அறிக்கையில், ஆஸ்திரேலியாவில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கடுமையான 'வார்த்தைகளில் கண்டிக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களின் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆதரவாக இருப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து, டென்மார்க் உள்ளிட்ட நாட்டு தலைவர்களும் ஆஸ்திரேலியாவில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் நாடான பாகிஸ்தானில் சமஸ்கிருதம்

## பாடமாக வைக்கிறது லாகூர் பல்கலைக்கழகம்



இஸ்லாமாபாத்,டிச.15–

'எங்களுக்கும் சொந்தமானதுதான்' எனும் முழக்கத்துடன், பாகிஸ்தான் வகுப்பறைகளுக்குள் சமஸ்கிருதம் நுழைந்து புத்துயிர் பெறுகிறது. லாகூர் பல்கலைக்கழகத்தில் இது பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது.

பகவத் கீதை, மகாபாரதக் கதைகளும் கற்றுத் தரப்பட உள்ளன. கடந்த 1947ம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான்பிரிவினைக்கு பின்முதல்முறையாகவும், அந்நாட்டு உயர்கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாகவும் சமஸ்கிருத மொழியை ஒரு பாடமாக லாகூர் மேலாண்மை அறிவியல் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது-.

சமஸ்கிருத இலக்கணத்தின் தந்தை என்று அழைக்கப்படும் பாணினி பிறந்த சலாதுரா கிராமம், தற்போது பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா

மாகாணத்தில் உள்ளது.

அறிமுகம்

மேலும், உருது, பஞ்சாபி மற்றும் சிந்தி மொழி சொற்களுக்கான வேர் சொற்கள் சமஸ்கிருத்தில் இருப்பதாக கூறப்படுவதையடுத்து, சமஸ்கிருதம் எங்களுக்கும் சொந்தமானது என்ற முழக்கத்துடன் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக லாகூர்

பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தி உள்ளது.

சமஸ்கிருத பாடத்திட்டத்தை, லாகூரில் உள்ள பார்மன் கிறிஸ்டியன் கல்லுாரியின் சமூகவியல் இணை பேராசிரியரான டாக்டர் ஷாஹித் ரஷீத்

வடிவமைத்துள்ளார்.

செம்மொழிகள், மனித குலத்துக்கு தேவையான மிகுந்த ஞானத்தை கொண்டுள்ளன என்ற எண்ணத்தில், இவர் முதலில் அரபு மற்றும் பாரசீக மொழிகளை கற்க துவங்கி

உள்ளார்.

அதன் பின் சமஸ்கிருதத்தின் மீது ஆர்வம் ஏற்பட்டு, கேம்பிரிட்ஜ் சமஸ்கிருத அறிஞர் அன்டோனியா ரூப்பல் மற்றும் ஆஸ்திரேலிய இந்தியவியலாளர் மெக்கோமாஸ் டெய்லர் ஆகியோரிடம் ஆன்லைன் வாயிலாக சமஸ்கிருதத்தை பயின்றுள்ளார்.

வரவேற்பு

இவரின் சீரிய முயற்சியின் காரணமாக ஆரம்பத்தில் மூன்று மாத காலம், வார இறுதி நாட்கள் பயிற்சி வகுப்பாக துவங்கப்பட்ட இந்த சமஸ்கிருத கல்வி, மாணவர்கள் இடையே மாபெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து, லாகூர் மேலாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்தில் முழு நேர பாடமாக இந்த சமஸ்கிருத கல்வி மாற்றப்பட்டுள்ளது. வெறும் மொழியை மட்டும் கற்பதோடு மட்டுமின்றி, மகாபாரதம் மற்றும் பகவத் கீதை ஆகியவற்றை இலக்கியங்களாகவும், தத்துவங்களாகவும் பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நல்லுறவு

இதன்வாயிலாக அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளில் பாகிஸ்தானில் இருந்தே கீதை மற்றும் மகாபாரத ஆய்வாளர்களை உருவாக்க பல்கலைக்கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்தியாவில் ஹிந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் அரபு மொழியை கற்பது போல், பாகிஸ்தானியர்கள் சமஸ்கிருதம் கற்பது, இரு நாடுகளுக்கு இடையே ஒரு நல்லுறவு பாலமாக அமையும் என்று பேராசிரியர்கள் நம்புகின்றனர்.

# அமெரிக்க பல்கலையில் துப்பாக்கிச்சூடு

## 2 பேர் பலி; 8 பேர் படுகாயம்




வாஷிங்டன்,டிச.15–

அமெரிக்காவின் பிரவுன் (ஆணுாணிதீண) பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அமெரிக்காவின் ரோட் தீவின் தலைநகர் பிராவிடென்சில் உள்ள பிரவுன் (Brown) பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறைக் கட்டடம் அருகே மர்ம நபர் ஒருவர் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இந்த சம்பவத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 8 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. சந்தேக நபர் தலைமறைவாக உள்ளார். தாக்குதல் நடத்தியவர் கருப்பு நிற உடை அணிந்த ஒரு ஆண் என்றும், அவர் தப்பி ஓடிவிட்டதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

பல்கலையில் தங்கி படிக்கும் மாணவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டனர். துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பிரவுன் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் பழமையான மற்றும் மிகவும் மதிப்புமிக்க பல்கலைக்கழங்களில் ஒன்று. ஏழு மாடி கட்டடத்தில் பொறியியல் மற்றும் இயற்பியல் துறையில் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது. 100க்கும் மேற்பட்ட லேப்கள் உள்ளன.

அதிபர் டிரம்ப் கண்டனம்

பல்கலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு அதிபர் டிரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரவுன் பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எப்.பி.ஐ அதிகாரிகள் சம்பவ இடத்தில் உள்ளனர். சந்தேக நபர் காவலில் எடுக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

# அதிபர் டிரம்பின் விசா கட்டண உயர்வுக்கு எதிராக 20 அமெரிக்க மாகாணங்கள் வழக்கு

வாஷிங்டன்,டிச.15–

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கொண்டு வந்துள்ள 'எச்1பி' விசா கட்டண உயர்வு மற்றும் விசா தொடர்பான புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிராக, அமெரிக்காவின் 20 மாகாணங்கள் ஒன்றிணைந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், குடியேற்ற விதிகளில் சமீப காலமாக மிக கடுமை காட்டி வருகிறார். இதன் ஒரு பகுதியாக, எச்1பி விசாவுக்கான கட்டணத்தை வரலாறு காணாத அளவுக்கு உயர்த்தினார்.

மேலும், அமெரிக்கர்களுக்கு கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்பை வெளிநாட்டினர் எச்1பி விசா வாயிலாக முறைகேடாக தட்டிப் பறித்து வருவதாக குற்றஞ்சாட்டினார்.

எச்1பி விசாவுக்கான கட்டணத்தை, 4.50 லட்சம் ரூபாயில் இருந்து, 90 லட்சம் ரூபாயாக அதிரடியாக உயர்த்தி, கடந்த செப்டம்பரில் டிரம்ப் உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில், அமெரிக்க அரசியலமைப்பின்படி, அதிபர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி சட்டங்களுக்கு புறம்பாக தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க முடியாது என்று கூறி, விசா கட்டண உயர்வுக்கு எதிராக கலிபோர்னியா, நியூயார்க் உள்ளிட்ட மாகாணங்கள் சார்பில், நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளன. நாட்டின் மொத்தமுள்ள 50 மாகாணங்களில், 20 மாகாணங்கள் இவ்வாறு வழக்கு தொடர்ந்துள்ளன.

எச்1பி விசா வாயிலாக அமெரிக்காவுக்கு வரும் வெளிநாட்டு திறமையாளர்கள், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத் துறைகளில் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

விசாகட்டண உயர்வால் தங்கள் மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் மாகாணங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

.மேலும், பல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், வெளிநாட்டு அறிஞர்களையே பெரிதும் நம்பியுள்ளன.

இக்கட்டண உயர்வால் அந்நிறுவனங்களுக்கு நிதிச்சுமை அதிகரிக்கும் என தெரிவித்துள்ளன.

# கம்போடியாவுடன் தொடரும் எல்லை மோதல்

## தாய்லாந்து வீரர்கள் 4 பேர் பலி



பாங்காக்,டிச.15–

கம்போடியாவுடன் 5 நாட்களாக தொடரும் எல்லை மோதலில் தாய்லாந்து வீரர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ராணுவம் தகவல் தெரிவித்துள்ளது. தாக்குதல் தொடர்வதால், அமெரிக்கா மத்தியஸ்தம் எந்த பலனையும் கொடுக்கவில்லை. கம்போடியா - தாய்லாந்து இடையிலான எல்லை மோதல் நூறாண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. ஜூலையில் இரு நாடுகளும் போர் தொடுத்தன. இரு தரப்பிலும் 43 பேர் பலியாகினர். அமெரிக்க அதிபர், டொனால்டு டிரம்ப் மற்றும் மலேஷிய அதிபர் அன்வர் இப்ராஹிம் முயற்சியால், அக்டோபரில் இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இரண்டு மாதங்களாக சண்டை நிறுத்தம் அமலில் இருந்த நிலையில், கடந்த 7ம் தேதி நடந்த மோதலில் தாய்லாந்து ராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதால், மீண்டும் சண்டை துவங்கியது. ஒரு வாரமாக மோதல் நீடிக்கும் நிலையில், இரு தரப்பிலும் 25க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். எல்லையோரம் கிராமங்களில் வசிக்கும் நுாற்றுக்கணக்கானோர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். தாய்லாந்து பிரதமர் அனுடின் சார்ன் மற்றும் கம்போடியா பிரதமர் ஹன் மானெட்டிடம் தொலைபேசி வாயிலாக பேசியதாகவும், அப்போது இருவரும் போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்தனர் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் நேற்று அறிவித்தார். ஆனால், இரு நாட்டு எல்லைகளிலும் போர் தீவிரமாக நடக்கிறது. தாய்லாந்து வான்வழி தாக்குதல் நடத்தியதாகவும், கம்போடியா பி.எம்., 21 ராக்கெட்டுகளை ஏவியதாகவும் மாறி மாறி குற்றஞ் சாட்டுகின்றன. 5 நாட்களாக தொடரும் மோதலில் தாய்லாந்து வீரர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் மத்தியஸ்தம் தோல்வி அடைந்துள்ளது.

# சிரியாவில் ஐஎஸ் பயங்கரவாதிகள் தாக்குதலில் அமெரிக்கர்கள் 3 பேர் பலி

## டிரம்ப் கடும் எச்சரிக்கை

டமாஸ்கஸ்,டிச.15–

சிரியாவில் ஐஎஸ் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கர்கள் 3 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். சிரியாவில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்க ராணுவ வீரர்கள் ஈடுபட்டு இருந்தனர். அப்போது மர்ம நபர் ஒருவர் திடீரென சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினார். இந்த தாக்குதலை நடத்தியவரை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. சிரியாவின் இடைக்கால ஜனாதிபதி அகமது அல்-ஷரா, வெள்ளை மாளிகையில் சில வாரங்களுக்கு முன் டிரம்புடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, ஐஎஸ் அமைப்புக்கு எதிராக நடவடிக்கை சிரியா, அமெரிக்கா ஆகிய இருநாட்டு தலைவர்கள் ஆலோசனை நடத்திய நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: எங்கள் மீதும், சிரியா மீதும் ஐஎஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன்.

இதற்கு நாங்கள் பதிலடி தருவோம். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்து வருகின்றனர். இவ்வாறு டிரம்ப் கூறினார்.

# கனடாவில் இந்தியர்கள் 2 பேர் சுட்டுக்கொலை




ஒட்டாவா,டிச.15–

கனடாவில் நடந்த தாக்குதலில் பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கனடாவின் தென்கிழக்கு எட்மண்டனில், பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் பஞ்சாபின் மான்சாவில் உள்ள உத்தத் சைதவாலா கிராமத்தைச் சேர்ந்த குர்தீப் சிங் (27) மற்றும் ரன்வீர் சிங் (18) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழில் வாய்ப்புகளைத் தேடி இரண்டு இளைஞர்களும் தனித்தனியாக கனடாவுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கு வேலை தேடி வந்த நிலையில், துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தது விசாரணையில் தெரிய வந்தது.

எட்மண்டன் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளதாக தெரிவித்துள்ளனர். கனடா போலீசார் வேறு சில பஞ்சாப் இளைஞர்களை சுற்றி வளைத்து இந்த விவகாரம் குறித்து விசாரித்து வருவதாக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,600 உயர்ந்து ரூ.98,960 க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.200 உயர்ந்து , ஒரு கிராம் ரூ.12,370 க்கு விற்பனையாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,600 உயர்ந்துஒரு சவரன் ரூ.96,400 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.6. உயர்ந்து ரூ.210 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# பெட்ரோல் விலை ரூ.100.80, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.80 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.90.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

# முளைகட்டிய தானியங்களின் நன்மைகள்



முளைகட்டிய தானியங்கள் உடலுக்கு பல்வேறு நன்மைகளை அளிக்கின்றன. இவற்றில் வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நார்ச்சத்து அதிகம் உள்ளது. மேலும், முளைகட்டிய தானியங்களை உட்கொள்வதால், செரிமானம் மேம்படுவதுடன், நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை:

முளைகட்டிய தானியங்களில் வைட்டமின் சி, மெக்னீசியம், வைட்டமின் கே, ஜிங்க், கால்சியம் மற்றும் இரும்புச்சத்து போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. இவை உடலின் வளர்ச்சி மற்றும் செயல்பாட்டிற்கு இன்றியமையாதவை.

செரிமானத்திற்கு நல்லது:

முளைகட்டிய தானியங்களில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது செரிமான அமைப்பை சீராக இயங்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்:

முளைகட்டிய தானியங்களில் உள்ள வைட்டமின் சி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இது நோய்த்தொற்றுகளிலிருந்து உடலைப் பாதுகாக்கிறது.

எடை இழப்புக்கு உதவும்:

முளைகட்டிய தானியங்களில் கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் உள்ளது. எனவே, இது உடல் எடையை குறைக்க உதவுகிறது.

இதயத்திற்கு நல்லது:

முளைகட்டிய தானியங்களில் உள்ள நார்ச்சத்து, கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவுகிறது. இதனால், இதய நோய்கள் ஏற்படும் அபாயம் குறைகிறது.

சருமத்திற்கு நல்லது:

முளைகட்டிய தானியங்களில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள், சருமத்தை இளமையாக வைத்திருக்க உதவுகின்றன.

புரதச்சத்து அதிகம்:

ஜிம் செல்லும் நபர்களுக்கு இது ஒரு சிறந்த உணவு. ஏனெனில், இதில் புரதச்சத்து அதிக அளவில் உள்ளது.

ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்:

முளைகட்டிய தானியங்கள் ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகின்றன.

எந்த தானியங்களை முளைக்கட்டலாம்?

பாசிப்பயறு, கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, உளுத்தம்பயறு, சோயாபீன்ஸ், நரிப்பயறு, பீன்ஸ்.

முளைகட்டிய தானியங்களை எப்படி சாப்பிடலாம்?

முளைகட்டிய தானியங்களை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிடலாம். சாலட்களில் சேர்த்து சாப்பிடலாம் அல்லது சூப்களில் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றை ஸ்நாக்ஸாகவும் சாப்பிடலாம்.

முக்கிய குறிப்பு:

முளைகட்டியதானியங்களைசாப்பிடுவதற்குமுன்,அவற்றைநன்றாககழுவவேண்டும்.

சிலருக்கு முளைகட்டிய தானியங்களை சாப்பிடுவதால் வயிறு உப்புசம் ஏற்படலாம். அப்படிப்பட்டவர்கள், அளவாக சாப்பிடவும் அல்லது மருத்துவரை அணுகவும்.

# பிரட் ரசமலாய்

தேவையான பொருட்கள்



5பிரட் துண்டுகளாக நறுக்கியது
1/2 கப் கன்டெஸ்டு மில்க்
பாதாம் பிஸ்தா முந்திரி நொறுக்கியது
3 டேபில்ஸ்பூன்
சூடான பாலில் ஊறவைத்த 10
குங்குமப்பூ இதழ்கள்
1/2 லிட்டர் பால்

செய்முறை:

கடாயில் பால் ஊற்றி கொதிக்க விடவும்.கொதி வந்ததும் கன்டெஸ்டு மில்க் சேர்த்து கலக்கவும்.பின்னர் 5 நிமிடத்தில் ஊறவைத்த குங்குமப்பூ பால் நட்ஸை சேர்த்து கலக்கவும்.மிதமான சூட்டில் 15 நிமிடம் கொதிக்க விட்டு இறக்கவும்.ஆறியவுடன் பிரிட்ஜில் வைத்து குளிர்ந்தவுடன் பிரட் துண்டுகளை போட்டு பறிமாறவும். குளிர்ந்த சுவையான பிரட் ரசமலாய் தயார்.

# மணத்தக்காளி வற்றல் குழம்பு

தேவையானவை:



மணத்தக்காளி வற்றல் – 4 டீஸ்பூன்,
புளி – எலுமிச்சைப் பழ அளவு,
வெந்தயம், கடலைப்பருப்பு,
கடுகு – தலா அரை டீஸ்பூன்,
காய்ந்த மிளகாய் – 2,
பெருங்காயத்தூள் – சிறிதளவு,
சாம்பார் பொடி – 2 டேபிள்ஸ்பூன்,
கறிவேப்பிலை – சிறிதளவு,
எண்ணெய் – 50 மில்லி,
உப்பு – தேவையான அளவு.

செய்முறை:

புளியை 200 மில்லி தண்ணீர் விட்டு நன்கு கரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, கடலைப்பருப்பு, பெருங்காயத் தூள், வெந்தயம் சேர்த்து, காய்ந்த மிளகாயைக் கிள்ளிப் போட்டு, சாம்பார் பொடி சேர்த்து வறுக்கவும். பிறகு, மணத்தக்காளி வற்றலையும் போட்டுக் கிளறி, புளிக்கரைசலை ஊற்றி, உப்பு சேர்த்துக் கொதிக்கவிட்டு. கறிவேப்பிலை தூவி இறக்கவும்.

# மாறுகண் குறைபாடு,சிகிச்சைகளின் பலன்கள்




மாறுகண் குறைபாடு: நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகள்! - கிட்டப்பார்வை

மூன்று மாதங்களுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு இரண்டு கண்களும் சில நேரங்களில்

வேறு வேறு திசைகளில் இருப்பது இயல்பானதே. மூன்று மாதங்களுக்கு பின்னரும் இது தொடர்ந்தால், கட்டாயம் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும்; அது மாறு

கண் குறைபாடாக இருக்கலாம்.

மாறுகண் குறைபாடு

இரண்டு கண்களும் ஒரே நேர் திசையில் பார்க்க இயலாமல் வேறு வேறு திசையில் அமைந்திருக்கும் நிலையையே மாறுகண் குறைபாடு என்று அழைக்கிறோம். எங்கள் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில், 30 விழுக்காடு நோயாளிகளுக்கு உள்ள ஒரு குறைபாடு மாறுகண். மக்கள் தொகை கணக்கெடுப்பின்அடிப்படையில், 0.2 விழுக்காடு முதல் 40 விழுக்காடு வரை மாறுகண் குறைபாடு வேறுபடுகின்றது.

கவலைக்குரியதா இந்த குறைபாடு?

அழக்குணர்ச்சியுடன் சேர்த்து நாம் இதனை அணுகும் போது, இந்த குறைபாடு கொஞ்சம் பிரச்சனைக்குரியது தான்.

முப்பரிமாணம், தொலைநோக்குத் திறனை இழத்தல்

மாறுகண் குறைபாட்டிற்கு உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் இருக்கும் குழந்தைகள் நாளடைவில், கண்களின் முப்பரிமாண திறனை இழக்கின்றனர். அதாவது நாம் காணுகின்ற காட்சியின் தூரத்தை உணரச் செய்கின்ற, ஆழத்தை உணர முடியாது.

காட்சிகளின் தூரத்தைப் பற்றிய துல்லியமான விழிப்புணர்வு அவசியமாகின்ற வாகனம் ஓட்டுதல், விளையாட்டு, விமானம் ஓட்டுதல் போன்ற துறைகளில் வேலைக்குச் சேரும் போதும், கைகளும் கண்களும் இணைந்து செய்யும் வேலைகளின் போது இந்த குறைபாடு பாதிப்பை ஏற்படுத்தலாம்.

ஒரு கண்ணை மூடிக்கொண்டு, ஊசியில் நூல் கோர்க்கும் போது, முப்பரிமாணத்தின் தேவையை நம்மால் உணர முடியும்.

கண் மந்தமடைதல்: நீண்ட நாட்களாக மாறுகண் குறைபாடுடன் இருக்கும் குழந்தைகளுக்கு குறிப்பிட்ட வயதிற்கு பின்னர் மருத்துவச் சிகிச்சையளித்தாலும், நிரந்தரமாக கண் குறைபாடு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இந்த நிலையை மந்தமான கண் எனக் கூறுவார்கள். சரியான நேரத்தில் மாறுகண் குறைபாடுக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் அது மந்த கண் குறைபாடுக்கு வழி வகுக்கும்.

மாறு கண் குறைபாடு ஒருவருக்குள், தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை, சமூகத்தைப்பற்றிய எதிர்மறை எண்ணங்கள், சமூக வெறுப்பை உண்டாக்குதல், அடுத்தவர்களுடன் தொர்பு கொள்ளுவதில் தயக்கம், வேலை வாய்ப்பைப் பெறுவதில் தாமதம் போன்ற உளவியல் சிக்கல்கள் ஏற்படுத்தலாம்.

குறைபாடுக்கான காரணங்கள்

மாறுகண் குறைபாடு ஏற்படுவதற்கான சரியான காரணங்கள் இன்னும் தெளிவாக கண்டறியப்படவில்லை.

குழந்தைகளுக்கு இந்த குறைபாடு பெரும்பாலும், ஒளிவிலகல் (கிட்டப்பார்வை, தூரப்பார்வை பிரச்னை) குறைபாடுகளால் ஏற்படுகிறது. கண் தசை பலவீனம் காரணமாக மாறு கண்குறைபாடு ஏற்படலாம்.அறுவைசிகிச்சைமூலமாக இதனை சரி செய்ய முடியும்.

மிகவும் அரிதாக பரம்பரைக் காரணமாகவும், நரம்பியல் பிரச்னைகள் மற்றும் தொற்று காரணமாகவும் மாறுகண் குறைபாடு ஏற்படுகின்றது.

குழந்தைகள் அலைப்பேசி, தொலைக்காட்சி, கணினி ஆகியவைகளின் ஒளித்திரையை அதிக நேரம் பார்க்கும் பழக்கம் அதிகரித்து இருப்பதும் இந்த குறைபாடு ஏற்படுவதற்கான மறைமுகமான காரணிகளாகும்.

மாறுகண் குறைபாட்டை கண்டறிதல்:

சிலரிடம் உள்ள மாறுகண் குறைபாட்டைக் கண்டறிவது கடினமாகவே இருக்கிறது. பெரும்பாலன நேரங்களில், பார்வை மாறுபாடுகள் மூலமாக ஆரம்ப நிலையிலேயே இந்த குறைபாட்டைக் கண்டறிய முடியும்.மாறு கண் குறைபாடு அடிக்கடியோ அல்லது நிரந்தரமாகவே இருக்கக்கூடும். நிரந்தரமான குறைபாட்டிற்கு உடனடியாக பரிசோதனையும், சிகிச்சையும் அவசியம். சில நேரங்களில் வழக்கத்தைவிட தலை பெரியதாக இருக்கும் குழந்தைகளுக்கு மாறு கண்குறைபாடு வரவாய்ப்புள்ளது. அவ்வாறான குழந்தைகள் இந்த குறைபாடு இருக்கும்.

குழந்தைகளுக்கான சிகிச்சைகளின் பலன்கள்:

1.முப்பரிமாணப்பாவையை சீர்செய்தல்

2.சராசரி தோற்றம்

மறுகாண் குறைபாடுக்கான சிகிச்சைகுறைபாடு இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கும் பட்சத்தில், எந்தவித தயக்கமும் இன்றி, குழந்தைகள் கண்நோய் மருத்துவரைஅணுகி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு மாறுகண் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டால், அதன் தன்மையைப் பொறுத்து, கண்ணாடி அணிதல், பயிற்சிகள், அறுவை சிகிச்சை மூலமாக அதனைக் குணப்படுத்த முடியும்.

சில வகை குறைபாடுகளை கண் கண்ணாடி அணிவதன் மூலம் மட்டுமே சரி செய்ய முடியும்.

அறுவை சிகிச்சை: இதற்கான அறுவை சிசிச்சை வெளிப்புறத்திலேயே நடைபெறுகிறது. அதாவது, இந்த அறுவை சிகிச்சை பார்வை அச்சு மற்றும் கருவிழிகளை அசைக்கும் தசைகளுடன் தொடர்புடையது இல்லை. இதனால், மாறுகண் குறைபாடு அறுவை சிகிச்சையால் கண்பார்வை போய்விடும் என்ற அச்சம் தேவையில்லை; சிகிச்சைக்கு பின்னர் நல்ல பலனும் கிடைக்கின்றது.மாறு கண் குறைபாடு அதிர்ஷ்டத்தின் அடையாளம் இல்லை.

குழந்தைகளுக்கு குறைபாடு இருப்பது தெரிந்தால் தயக்கம் காட்டாமல் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுங்கள். சிகிச்சை குழந்தையின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துகிறது.எப்போது சந்தேகம் கொள்ள வேண்டும்: அசாதாரணமான கண் விலகல் பிரச்னை, கண்பார்வை ஒருங்கிணைப்பில் கோளாறு, தொலைக்காட்சி பார்க்கும் போது, புத்தகம் படிக்கும் போது வழக்கத்துக்கு மாறாக தலையை சாய்த்து வைத்து பார்த்தல் போன்றவை மாறு கண் குறைபாட்டின் அறிகுறியாக இருக்கலாம். உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதனை செய்ய வேண்டும்.

மாறு கண் குறைபாடு, தீவிரமான நரம்பியல் பிரச்னை மற்றும் உயிருக்கு ஆபத்தான கண்புற்று நோயாக மாற மிக அரிதாக வாய்ப்புள்ளது.

எனவே தயக்கம் காட்ட வேண்டாம்.உடனடியாககண்மருத்துவரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

# தரம்சாலாவில் 3-வது சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டி: இந்தியா - தென் ஆப்பிரிக்க அணிகள் பலப்பரீட்சை

தரம்சாலா: இந்தியா, தென் ஆப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான 3-வது சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டி இன்று தரம்சாலாவில் நடைபெறவுள்ளது.

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட், ஒருநாள், டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை தென் ஆப்பிரிக்காவும், ஒருநாள் தொடரை இந்தியாவும் கைப்பற்றின. இதைத் தொடர்ந்து 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் இந்தியா 101 ரன்கள் வித்தியாசத்திலும், 2-வது போட்டியில் தென் ஆப்பிரிக்கா 51 ரன்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. இதையடுத்து தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.



இந்நிலையில் 3-வது சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டி இமாச்சல பிரதேச மாநிலம் தரம்சாலாவிலுள்ள இமாச்சல் பிரதேச கிரிக்கெட் சங்க மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணி வீரர்கள் 2-வது போட்டியில் பந்துவீச்சிலும், பேட்டிங்கிலும் கோட்டை விட்டனர். அபிஷேக் சர்மா அதிரடியாக விளையாடினாலும் நீண்ட நேரம் களத்தில் அவரால் நிலைக்க முடியவில்லை. அவர் 17 ரன்களில் திரும்பினார்.

எனவே, இன்றைய ஆட்டத்தில் அவர் பொறுப்புடன் நீண்ட இன்னிங்ஸ் விளையாடி ரன்கள் குவிப்பார் என எதிர்பார்க்கலாம். அதேபோல் ஷுப்மன் கில், கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஆகியோரின் பேட்டிங் ஃபார்ம் கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

முதல் போட்டியில் 4 ரன்கள் எடுத்த கில், 2-வது போட்டியின் முதல் பந்திலேயே டக்-அவுட்டானார். எனவே, அவர் இன்றைய போட்டியில் உயர்மட்டத் திறனை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கலாம்.

கேப்டன் சூர்யகுமார் யாதவும், தனது பேட்டிங் திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

திலக் வர்மா 62 ரன்கள் குவித்ததால் மட்டுமே இந்திய அணி 2-வது போட்டியில் கவுரவமான ஸ்கோரை எட்ட முடிந்தது. திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா, ஜிதேஷ் சர்மா, சிவம் துபே ஆகியோரிடமிருந்து இன்று சிறப்பான மட்டை வீச்சு வெளிப்படும் என ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

2-வது போட்டியில் பவுலிங்கிலும் நமது வீரர்கள் மோசமான செயல்திறனை வெளிப்படுத்தினர். பும்ரா, அர்ஷ்தீப் சிங், ஹர்திக் பாண்டியா ஆகியோரின் பந்துவீச்சு எடுபடவில்லை. அர்ஷ்தீப் சிங் ஒரே ஓவரில் 7 வைட் பந்துகளை வீசி ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

வருண் சக்ரவர்த்தி, அக்சர் படேல் ஆகியோர் மட்டுமே சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தினர்.

எனவே, இன்றைய ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்க பேட்ஸ்மேன்களுக்கு அதிக அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் இந்திய வீரர்களின் பந்துவீச்சு இருக்கவேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தென் ஆப்பிரிக்க அணியைப் பொருத்தவரையில் அந்த அணியின் தொடக்க வீரர் குயிண்டன் டி காக் அபாரமாக விளையாடி வருகிறார். எனவே, அவரிடமிருந்து மேலும் ஓர் அபாரமான இன்னிங்ஸ் வெளிப்படலாம். எய்டன் மார்க்ரம், டெவால்ட் பிரேவிஸ், டோனவன் பெரேரா, டேவிட் மில்லர், மார்கோ யான்சன் ஆகியோரும் தங்களது அதிரடியை வெளிப்படுத்த காத்திருக்கின்றனர்.

அதேபோல பந்துவீச்சிலும் லுங்கி நிகிடி, மார்கோ யான்சன் லுத்தோ சிபம்லா, டோனவன் பெரேரா, ஓட்நீல் பார்ட்மென், ஜார்ஜ் லிண்டே ஆகியோரும் இந்திய அணி பேட்ஸ்மேன்களை அச்சுறுத்தக் காத்திருக்கின்றனர்.

# தோல்வியுடன் விடைபெற்றார் பிரபல WWE வீரர் ஜான் சீனா




சென்னை: பிரபல ஙிஙிஉ மல்யுத்த வீரரும் நடிகருமான ஜான் சீனா, தன்னுடைய கடைசி போட்டியில் தோல்வியடைந்த நிலையில் ஓய்வு பெற்றார். கடந்த ஆண்டே தனது கடைசி போட்டி குறித்த அறிவிப்பை அவர் தெரிவித்திருந்தார்.

90-ஸ் கிட்ஸ்களின் மறக்க முடியாத நினைவுகளில் ஙிஙிஉ நிகழ்ச்சிக்கு எப்போதும் தனி இடம் உண்டு. இந்த சண்டைப் போட்டியில் பல 'சூப்பர் ஸ்டார்கள்' வருகை தந்து, வென்று காட்டி, விடைபெற்றுள்ளனர். இதில் ஜான் சீனாவுக்கு என தனி ரசிகர் பட்டாளம் உண்டு. அதற்கு காரணம் அவருடைய தனித்துவமான சண்டைப் பாணி. அதன் மூலம் உலக அளவில் ரசிகர்களை அவர் கவர்ந்தார். ரிங்குங்கள் சண்டைக்காக அவர் என்ட்ரி கொடுக்கும் அந்த தருணத்தில் ஒலிக்கும் பின்னணி இசை பலரது போனில் ரிங்டோனாக ஒலித்தது உண்டு.

கடந்த 2002-ம் ஆண்டு ஙிஙிஉ-ல் அறிமுகமான ஜான் சீனா, ஙிஙிஉ ஜாம்பவான்களான தி ராக், ட்ரிபிள் ஹெச், ரேண்டி ஆர்ட்டன், தி அண்டர்டேக்கர் உள்ளிட்டொருடன் மோதியுள்ளார். 14 முறை ஙிஙிஉ சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். இந்நிலையில், தனது கடைசி போட்டியில் அவர் தோல்வியுடன் விடைபெற்றார். மல்யுத்தம் தவிர 'தி சூசைட் ஸ்குவாட்', 'ஃப்ரீலான்ஸ் உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களிலும், டிசி காமிக்ஸின் பிரபலமான 'பீஸ்மேக்கர்' வெப் தொடரில் பிரதான கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

# உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி: இறுதிச் சுற்றுக்கு இந்திய அணி முன்னேற்றம்



சென்னை: உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி இறுதிச் சுற்றுக்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.

எஸ்டிஏடி உலகக் கோப்பை ஸ்குவாஷ் தொடர் சென்னையில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று அரை இறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் இந்திய அணி, எகிப்து அணியுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் இந்தியா 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

இந்திய வீரர் வேலவன் செந்தில் குமார் 7-1, 7-3, 7-6 என்ற புள்ளிகள் கணக்கில் இப்ராஹிம் எல்காப்னியை வென்றார். மற்றொரு ஆட்டத்தில் அனஹத் சிங் 6-7, 7-5, 7-3, 3-7, 7-3 என்ற கணக்கில் நூர் ஹெய்கலை தோற்கடித்தார். அபய் சிங் 7-5, 6-7, 7-5, 7-6 என்ற புள்ளிகள் கணக்கில் ஆடம் ஹவாலைச் சாய்த்தார்.

ஜோஷ்னா சின்னப்பா, நார்டைன் கராஸ் ஆகியோரிடையிலான ஆட்டம் நடைபெறவில்லை. இதையடுத்து 3-0 என்ற கணக்கில் இந்தியா, எகிப்து அணியை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இறுதிச் சுற்றில் இந்தியா, ஹாங்காங் அணியுடன் மோதவுள்ளது.

# ''மனதளவில் திடமாக இருந்தால்...'' - வெற்றி ரகசியம் சொல்லும் திலக் வர்மா

தரம்சாலா: மனதளவில் திடமாக இருந்தால் எந்த இடத்திலும் பேட் செய்ய களம் கண்டு, சிறப்பாக விளையாட முடியும் என இந்திய கிரிக்கெட் வீரர் திலக் வர்மா தெரிவித்துள்ளார்.



தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை தென் ஆப்பிரிக்காவும், ஒருநாள் தொடரை இந்தியாவும் வென்றன. 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 2 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் முதல் போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் தென் அப்பிரிக்காவும் வென்றுள்ளன. மூன்றாவது போட்டி இன்று தரம்சாலாவில் நடைபெறுகிறது.

கடந்த போட்டியில் 214 ரன்கள் இலக்கை விரட்டிய இந்திய அணி 162 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதில் இந்திய அணி சார்பில் பேட்டிங் ஆர்டரில் மூன்றாம் இடத்தில் அக்சர் படேல் களம் கண்டு, 21 பந்துகளில் 21 ரன்கள் எடுத்தார். 5-ம் இடத்தில் விளையாடிய திலக் வர்மா 34 பந்துகளில் 62 ரன்கள் எடுத்தார்.

இந்த சூழலில் செய்தியாளர் சந்திப்பில் திலக் வர்மா, ''அணியில் உள்ள எல்லோரும் பேட்டிங் ஆர்டரில் எந்த இடத்திலும் விளையாட தயாராக உள்ளோம். அணி நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஏற்ப மூன்று, நான்கு அல்லது ஐந்தாம் இடத்தில் விளையாட நான் தயாராக உள்ளேன். மனதளவில் திடமாக இருந்தால் எந்த இடத்திலும் பேட் செய்ய களம் கண்டு சிறப்பாக விளையாட முடியும்.

கடந்த 2024 உலகக் கோப்பை தொடரில் டாப் ஆர்டரில் அக்சர் படேல் தனது ரோலை சிறப்பாக செய்திருந்தார். சில நாட்களில் நமது திட்டங்கள் நடைபெறாமல் போகலாம்'' என்றார்.

# க்ரைம் த்ரில்லராக உருவான 'தூள் பேட்டை போலீஸ் ஸ்டேஷன்'



அஸ்வின் குமார் நாயகனாக நடித்துள்ள வெப் தொடர் 'தூள் பேட்டை போலீஸ் ஸ்டேஷன்'. இது ஆஹா ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. இதை ஜெஸ்வினி எழுதி, இயக்கியுள்ளார். குரு லட்சுமணன், பாடினி குமார், ஸ்ரீத்து கிருஷ்ணன், பிரீத்தி ஷர்மா, சவுந்தர்யா, ஷியமந்தா கிரண், ரவிவர்மா, பிர்லா போஸ், விஸ்வாமித்ரன், சுரேந்தர் விஜே, ரஞ்சனா என பலர் நடித்துள்ளனர். பேரபிள் பிக்சர்ஸ் சார்பில் தேவன் சார்லஸ், பிரவீன் குமார், சரண்யா வீரமணி ஆகியோர் தயாரித்துள்ளனர். இந்த க்ரைம் த்ரில்லர் தொடருக்கு என்.எஸ்.சதீஷ்குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். அஷ்வத் இசையமைத்துள்ளார். ''தூள் பேட்டை பகுதியில் துணை ஆணையராகப் பொறுப்பேற்கும் அஷ்வின் குமார், அங்கு நடக்கும் 3 கொலைகள் பற்றிய விசாரணையை தொடங்குகிறார். முதல் இரு எபிசோடுகளில் க்ரைம் த்ரில்லர் அம்சங்களுக்கு துளியும் குறைவின்றி ஏராளமான கேள்விகளை எழுப்பும் திரைக்கதை, ரசிகர்களுக்கு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தும்'' என்கிறார் இயக்குநர்.

# கொம்புசீவி'யில் உண்மை சம்பவக் கதை: இயக்குநர் பொன்ராம் தகவல்

சண்முக பாண்டியன் ஹீரோவாக நடிக்கும் 'கொம்பு சீவி' படத்தை பொன் ராம் இயக்கி இருக்கிறார். இதில் சரத்குமார் முக்கிய கேரக்டரிலும் புதுமுகம் தார்னிகா நாயகியாகவும் நடிக்கின்றனர்.

மேலும் சுஜித் ஷங்கர், கல்கி, முனீஷ்காந்த், காளி வெங்கட், ஜார்ஜ் மரியான் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஸ்டார் சினிமாஸ் முகேஷ்டி. செல்லையா தயாரித்துள்ள இப்படம் டிச.19-ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில் படம் பற்றி இயக்குநர் பொன்ராம் கூறும்போது, ''1996-ம் காலகட்டத்தில், தேனி மாவட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவக் கதையை மையப்படுத்தி, சில மாற்றங்களுடன் இப்படத்தை உருவாக்கி இருக்கிறோம். வைகை அணை கட்டும்போது 12 கிராமங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. மக்கள் இடம் பெயர்ந்தாலும் அம்மக்களின் வாழ்வாதாரம் அந்தப் பகுதியைச் சுற்றிதான் இருக்கும். அணையில் தண்ணீர் வற்றினால் அவர்கள் வைத்த கிணறு, வீடு ஆகியவை அடையாளங்களாகத் தெரியும்.

நான் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படப்பிடிப்புக்காக அந்தப் பகுதிக்குச் சென்றபோது அணைக்குள் ஒரு கிணறு இருந்தது. அதில் மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். தண்ணீர் வந்து அணை நிரம்பினால், அதை விட்டுவிடுவார்கள். இதன் பின்னணியில் அமைக்கப்பட்ட கதைதான் இந்தப் படம்.

ஒரு விஷயத்தைத் தூண்டி விடுவதற்கு கொம்புசீவி விடுவது என்று கிராமங்களில் சொல்வது உண்டு. அதனடிப்படையில் வைக்கப்பட்ட தலைப்புதான் இது. இதில் சரத்குமார், சண்முக பாண்டியன் இருவருமே சிறப்பாக நடித்துள்ளனர். வழக்கமாக என் படங்களில் இருப்பது போல ஆக்‌ஷன், காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கி இருக்கிறோம். இதில் நாயகியாக நடித்துள்ள தார்னிகா, முன்னாள் ஹீரோயின் ராணியின் மகள். அவர் போலீஸாக நடித்துள்ளார்'' என்றார்.

'கொம்புசீவி'யில் உண்மை சம்பவக் கதை: இயக்குநர் பொன்ராம் தகவல்சண்முக பாண்டியன் ஹீரோவாக நடிக்கும் 'கொம்பு சீவி' படத்தை பொன் ராம் இயக்கி இருக்கிறார். இதில் சரத்குமார் முக்கிய கேரக்டரிலும் புதுமுகம் தார்னி




கா நாயகியாகவும் நடிக்கின்றனர்.

மேலும் சுஜித் ஷங்கர், கல்கி, முனீஷ்காந்த், காளி வெங்கட், ஜார்ஜ் மரியான் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஸ்டார் சினிமாஸ் முகேஷ்டி. செல்லையா தயாரித்துள்ள இப் படம் டிச.19-ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில் படம் பற்றி இயக்குநர் பொன்ராம் கூறும்போது, ''1996-ம் காலகட்டத்தில், தேனி மாவட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவக் கதையை மையப்படுத்தி, சில மாற்றங்களுடன் இப்படத்தை உருவாக்கி இருக்கிறோம். வைகை அணை கட்டும்போது 12 கிராமங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. மக்கள் இடம் பெயர்ந்தாலும் அம்மக்களின் வாழ்வாதாரம் அந்தப் பகுதியைச் சுற்றிதான் இருக்கும். அணையில் தண்ணீர் வற்றினால் அவர்கள் வைத்த கிணறு, வீடு ஆகியவை அடையாளங்களாகத் தெரியும்.

நான் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படப்பிடிப்புக்காக அந்தப் பகுதிக்குச் சென்றபோது அணைக்குள் ஒரு கிணறு இருந்தது. அதில் மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். தண்ணீர் வந்து அணை நிரம்பினால், அதை விட்டுவிடுவார்கள். இதன் பின்னணியில் அமைக்கப்பட்ட கதைதான் இந்தப் படம்.

ஒரு விஷயத்தைத் தூண்டி விடுவதற்கு கொம்புசீவி விடுவது என்று கிராமங்களில் சொல்வது உண்டு. அதனடிப்படையில் வைக்கப்பட்ட தலைப்புதான் இது. இதில் சரத்குமார், சண்முக பாண்டியன் இருவருமே சிறப்பாக நடித்துள்ளனர். வழக்கமாக என் படங்களில் இருப்பது போல ஆக்‌ஷன், காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கி இருக்கிறோம். இதில் நாயகியாக நடித்துள்ள தார்னிகா, முன்னாள் ஹீரோயின் ராணியின் மகள். அவர் போலீஸாக நடித்துள்ளார்'' என்றார்.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**